திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

152
OFFICE OF THE STATE ED...
120/Gen/71
13 DEC 1971
13/12/71
GAZETTEER UNIT, MADRAS

திரு. சிவகாமி அம்மை,
வடகாலத்தூர், நாகை வட்டம்

மாலை 14 | விரோதிகிருது - கார்த்திகை - டிசம் 1971 | மணி 3

தமிழ் நாடு அரசின் அறநிலைய

குடந்தை திரு. ஆதிகும்பேசுவரசுவாமி கோயிலுக்குத் தமிழக ஆளுநர் மேதகு திரு. கே. கே. ஷா அவர்கள் வருகை தந்தபோது, அறங்காவலர் குழுத் தலைவர் திரு. சு. பத்மநாபன் அவர்கள் பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தல் (18—8—71)

பொருளடக்கம்

(1) திருவருணைக் கலம்பகம்
(2) இளங்கோவடிகள் சிலைதிறப்பு விழா
(3) இளங்கோவும், சிலப்பதிகாரமும்
(4) தருமையாதீன குருபூசை விழா
(5) குருபூசை விழா
(6) அழைப்பை நோக்கி
(7) அன்பு அஞ்சலி
(8) தோத்திரப் பதிகம்
(9) அன்பின் வணங்கிப் போற்றுகின்றேன்!
(10) சிலப்பதிகாரம் காட்டும் தெய்வச் செந்நெறி
(11) சங்கும், சங்காபிடேகமும்
(12) சென்ன பட்டணத்துச் சட்டம்
(13) தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய திருமாலை
(14) விநாயக வணக்கம்
(15) முருக வணக்கம்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.—

— ஆசிரியர்

152



13 DEC 1971

மாலை 14] விரோதிகிருது — கார்த்திகை — டிசம்பர் 1971 [மணி 3

திருவருணைக் கலம்பகம்*

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

முன்னுரை:

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின்கண் உள்ள சிற்றிலக்கிய வகைகள் (பிரபந்தங்கள்) பலவற்றுள், கலம்பகம் என்பதும் ஒன்று. புயவகுப்பு மதங்கு அம்மானை காலம் சம்பிரதம் கார் தவம் குறம் பாண் களி சித்து இரங்கல் ஊசல் என்னும் பதினெட்டு வகை, உறுப்புகள் கலந்து வருமாறு பாடப்படுதலின், இப்பிரபந்தம் **கலம்பகம்** என்னும் பெயர் பெற்றது. மருட்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் கலித்தாழிசை கலிநிலைத்துறை வஞ்சிவிருத்தம் வஞ்சித்துறை ஆசிரியத்துறை வெண்துறை வெண்பா கலித்துறை முதலிய, வெவ்வேறு வகையான அமைப்புடைய பாடல்களும், மடக்கு வண்ணம் சந்தம் முதலியனவும் கலந்து வரும்படி, கவிஞன் தன் திறமை தோன்றப் பாடுவது ஆதலினாலும், இதற்குக் கலம்பகம் எனப் பெயரமைந்தது என்றும், பிறவாறும் பெரியோர்கள் கூறுவர்.

---

* திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீப விழாவினை முன்னிட்டு, இக்கட்டுரை இங்கு வெளியிடப் பெறுகின்றது.

148692

திருவருணைக் கலம்பகம்:

இத்தகைய எத்தனையோ பல கலம்பகங்கள் தமிழில் இருப்பினும், அவற்றுள் முதன்மையாகக் குறிப்பிடத்தக்க சிறப்புடைய சிலவற்றுள், திருவருணைக் கலம்பகம் என்பது ஒன்றாகும். இது, நூறு (100) பாடல்களைக் கொண்டது.

சைவத்தின் மேற்சமயம் வேறிலை ;
அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லெனும்
நான் மறைச் செம்பொருள் வாய்—
மை, வைத்த சீர்த்திருத் தேவாரமும்
திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள்
எம் உயிர்த் துணையே

எனத் தேவார திருவாசக ஆசிரியர்களின் துதியாகப் பலராலும் அறிந்து பெரிதும் போற்றிப் பாடப்பெற்று வருகின்ற செய்யுள், திருவருணைக் கலம்பகம் என்னும் நூலில் உள்ள செய்யுளேயாம் என்பது அறிதற்குரியது.

எல்லப்ப நாவலர்:

இந்நூலை இயற்றியருளியவர், சைவ எல்லப்ப நாவலர் என்னும் தமிழ்ப் பெரும் கவிஞராவர். இவர் சோழநாட்டில் திருவெண்காடு என்னும் தலத்திற்கு அருகில் உள்ள பூந்தாழை என்னும் ஊரில் தோன்றியவர். இராதாநல்லூர் என்பது இவர் பிறந்த ஊர் என்றும், சீர்காழியிற் சில காலம் இவர் வாழ்ந்து வந்தார் என்றும் கூறுவது உண்டு. இவர், அருணாசலபுராணம், திருவெண்காட்டுத் தலபுராணம், செவ்வந்திப் புராணம், திருவிரிஞ்சிப்புராணம், தீர்த்தகிரிப் புராணம், திருச்செங்காட்டங்குடிப்புராணம், திருவருணை அந்தாதி. திருவாரூர்க் கோவை, சவுந்தரியலகரிஉரை முதலிய பல சிறந்த நூல்களை இயற்றியருளிய செந்தமிழ்ப் பெரும் கவிஞராவர்! இத்தகைய சிறந்த பெருங் கவிஞராகிய எல்லப்பநாவலர் இயற்றிய திருவருணைக் கலம்பகம் என்னும் நூலின், ஒரு சில இனிய சுவைமிக்க பாடல்களையும் கருத்துக்களையும், சுருக்கமாக இயன்ற அளவு ஈண்டுக் காண்போம்.

தனிப்பெருந் தலைமைச் சான்றுகள்:

(1) திருவண்ணாமலை நாதரே! நீர் 'சோணகிரி' என நிறைந்த சுடரொளியாய் நின்றருளியும், நுமது அடி முடிகளை முறையே திருமால் ஏனம் ஆகியும், பிரமன் எகினம் ஆகியும், தேடிக்காணமுயன்று முடியாமல் திகைத்தனர். ''ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக் கண்ணினில் சிந்தை நாடுக'' எனச் சிவஞான போதம் கூறுவதை உணர்ந்து, ஞானக் கண்கொண்டு நாடுமாறு உணர முயலாமையினால்தான், அவர்கள் நும்மைக் காண முடியாமற் போயினர் போலும்.! *

திருவண்ணாமலை இறைவனே! நீர் மலை வடிவம் எடுத்தது எற்றுக்கு? கயிலாய மலையின் கண் இருப்பதற்கோ? மேரு மலையை வில்லாக வளைப்பதற்கோ? பார்வதி அம்மையை நுமக்கு மணம் செய்து கொடுத்த மாமனாகிய மலையரையன் மகிழ்வதற்கோ? எதன்பொருட்டு மலையுருவம் எடுத்தீர்?

நீர் திருமேனி கொண்டதனால் அன்றோ, இவ்வுலகத்தில் படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களும், ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறுதொழில்களும்,

---

*''The above story does not stem from any sectarian zeal; its purpose is not to cry down Lord Brahma or Vishnu. It clothes its esoteric significance; everyone is likely to be swept off by his own ego and make tall claims. In its height of spiritual ignorance, 'Jiva' loses all perspective and humility. Ego consciousness is so powerful that 'Jiva' caught in it is not prepared to concede the smallness of a rattling ego and a little human intellect. Only the benign grace of God-consciousness can save 'Jiva'.. ... .''

—K. S. Sugavanam.

தொண்ணூற்ருறு தத்துவங்களின் தோற்றமும் தொழிலும் நடைபெறுகின்றன. இல்லையேல் எவ்வாறு இயலும்?

இருக்கு முதலிய நான்கு வேதங்களும் நும்முடைய பலவித வடிவங்களைக் கூறுகின்றன. ஆயினும், அவற்றுள் ஒன்று உரைத்ததனை, மற்ருென்று கூற அறியாதது என்னை? வேதங்கள் ஐயா என ஓங்கி, ஆழ்ந்தகன்ற நுண்ணியர் நீர், என்பது புலப்படுத்துதற்கோ?

எத்தனை கற்ப காலங்கள் கழிந்தாலும், நும் திருமுடியிலுள்ள இளம் பிறையானது, சிறிதும் தேயாமலும் வளராமலும் இருப்பது ஏன்? நீர் எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் நிலைபெற்றிருத்தலை விளக்குவதற்கோ? நும்மைப் புகலடைந்தோர் என்றும் மாரு நிலையில் வைகி அழிவின்றி இன்புற்றிருப்பர் என்பதுணர்த்துதற்கோ?

எத்தனையோ கொடிய அசுரர்களை அழித்தும், தேவர்களைத் தண்டித்தும், நும்முடைய திருக்கையிலுள்ள மழுப்படை மழுங்காது விளங்குதல் எங்ஙனம்? தேவர்களும் முனிவர்களும் அஞ்சி நடுங்கும்படி தோன்றிய ஆலாலம் என்னும் கொடிய நஞ்சை, நீர் கண்டமட்டும் (பார்த்த உடனே) உண்டருளியும், அது நும்முடைய கண்டமட்டில் (கழுத்தளவில்) கடவாது நின்றது யாங்ஙனம்? இறப்பும் பிறப்பும் மூப்பும், முதலும் நடுவும் ஈறும் ஆகியவைகள் நுமக்கு ஒரு சிறிதும் இல்லாமையையும், நுமது தனிப் பெருந் தலைமையையும் உணர்த்துகின்ற சான்றுகளே இவைகள் போலும்.!

எல்லாமும் இவரே:

(2) சோணகிரி வித்தகராகிய திருவண்ணமலை இறைவர்க்கு வேருகத் தனித்து உள்ளவர் ஒருவரும் இல்லை. ஏனெனில் இவர் ஒருவரே, ஆன்மாவும், சூரிய சந்திரரும், நிலம் நீர் நெருப்பு காற்று வானம் என்னும் ஐம்பூதங்களும் ஆகிய, அட்ட மூர்த்தங்களாகவும் இருந்து விளங்குகின்ருர். ஆதலின் எண்ணுங்கால், எல்லாம் இவரேயாகத் திகழ்கின்ருர்.

வேதநுவல் சோணகிரி வித்தகர்க்கார்
வேருவார்;
சோதிஇய மானன்இவர்; சோமன்இவர்;-
ஆதவனும்
மண்ணும்கா லும்புனலும் வானும்அழல்
தானும்இவர்;
எண்ணுங்கால் எல்லாம் இவர்

அவனன்றி அணுவும் அசையாது:

(3) இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் உயிராக விளங்குபவர் அருணேசரே யாவர். இவர் அசைந்தால் அல்லாமல், உலகில் ஓர் அணுவும் அசைதல் இயலாது. இவர் தென்முகக் கடவுள் (தட்சிணுமூர்த்தி) நிலையில் விளங்கிச் சனகர் சனந்தனர் சனுதனர் சனற்குமாரர் என்னும் முனிவர்களுக்குத் தத்துவஞானம் உணர்த்துவதற்காக யோக நிலையில் அமர்ந்திருந்தபோது, உயிர்களுக்குக் காம இச்சையை உண்டாக்குகின்ற மன்மதன் உயிரோடு இருந்தானுயினும், உயிர்களெல்லாம் போகநுகர்ச்சி சிறிதுமின்றிச் செயலற்றுக் கிடந்தன: இதனல், இவர் அசைந்தாலன்றி எதுவும் அசையப் பெருது என்பதையும், இவர் தான் உயிர்களுக்கெல்லாம் உயிராக நின்று இயக்கி வருகின்ருர் என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

எல்லா உயிர்க்கும் உயிர்,
அருணேசர்; இவர் அசைவின்
அல்லாது அணுவும் அசையாதது
என்பது அறிந்தனமே;
வில்ஆடல் மாரன் இருக்கவும்,
யோகம் விளைத்த அந்நாட்
புல்லாது இருந்தன; எல்லா
உயிரும் தம் போகத்தையே

சூலமும் மழுவும் சுமந்தது ஏன்?

(4) அண்ணுமலைநாதரே! நீர்நும் திருவடியின் நகத்தால் இராவணனது மார்பை நெரித்தீர். திருக்கையின் நகத்தால் பிரமனின்

தலையைப் பறித்தீர். திரிபுரங்களைச் சிரித்தே எரித்தீர். மன்மதனின் உடலை நெற்றிக் கண்ணைத் திறந்தே எரித்தீர். இவ்வாறு இருக்கவும், சூலப்படையையும், மழுப் படையையும், நீர் ஏன் வீணே சுமந்து கொண்டிருக்கின்றீர். இப்படைகளின் துணையும் தங்களுக்கு வேண்டுமோ? படைகள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்த முற்படாத நுமது பேராற்றல் சாலவும் பெரியதாகும். எல்லாப் படைகளுக்கும் ஆற்றல் எம்மாலேயே ஏற்படுகின்றது; அவற்றினால் எமக்கு உண்டாகத் தக்க ஆற்றல் ஏதும் இல்லை என்ப தனையே, இங்ஙனம் நீர் உணர்த்துகின்றீர் போலும்!

காலில் துலங்கும் நகத்தாலும்,
கையிற் பொலிகூர் நகத்தாலும்,
சீலத்து அரக்கன் உரம்கொண்டீர்!
திசைமா முகனைச் சிரம்கொண்டீர்!
மேலைப் புரத்தை நகைத்தெரித்தீர்!
வில்வேள் புரத்தை விழித்தெரித்தீர்!
சூலப் படைஏன், மழுப்படைஏன்
சுமந்தீர்? அருணை அமர்ந்தீரே!

மாலானவர்க்கு இரங்கார்:

(5) பெண் என்றால் பேயும் இரங்கும் என்பது பழமொழி. இத் தலைவியோ, காதல் மிகுதியினால் தன் மேலணிந்திருந்த உடையை இழந்தாள். தான் அணிந்திருந்த சங்கு வளையலையும் மோதிரத்தையும் நழுவ விட்டாள். சிலம்பணிந்த தன் கால்விரலால் நிலத்தைக் கீறி வருந்தி நிற்கின்றாள். இவளது நிலையைக் கண்டிருந்தும் மாலானவர்க்கு(காதல் மயக்கம் கொண்டவர்க்கு) இரங்கி அருள் செய்யாத வன்கண்ணர் (கல் நெஞ்சமுடை யவர்) ஆக, இவ் அண்ணாமலையார் இருக் கின்றார். இவர் இங்ஙனமும் இருத்தல் தகுமோ?

மேலாடை தோற்று, அணி சங்காழி
கைவிட்டு, மென்சிலம்பின்
காலால் வருந்தி, நிலம்கீறும்
கோலத்தைக் கண்டிருந்தும்,
ஆலாலம் உண்டவர் அண்ணா
மலையார் தம் அன்பர்க்கன்றி,
மாலானவர்க்கு இரங்கார், இங்ஙனே
ஒரு வன்கண்ணரே

இப்பாடலில் 'மாலானவர்க்கு இரங்கார்' என்பது, மிகுந்த சுவையும் சொல் நயமும் உடையது. இது தலைவிக்கும் திருமாலுக்கும் சிலேடை. திருமால் பீதாம்பரமாகிய தமது மேலாடையினைப் புறக்கணித்தார். சங்கும் சக்கரமும் ஆகிய படைகளைக் கை விட்டார். சோதிப் பிழம்பாகத் தோன்றிய மலையின் அடியினைக்காண விரும்பி, வராக வடிவம் கொண்டு நிலத்தைக் கீறிக் கிளறிக் காண முயன்றார். இங்ஙனமெல்லாம் முயன்ற திருமாலுக்கு, அண்ணாமலையார் சிறிதும் இரக்கம் காட்டாமல் (வெளிப்பட்டுத் தோன்றாமல்) இருந்து விட்டார். அண்ணாமலை யார் தம் அன்பர்களுக்கேயன்றி, மயக்கம் கொண்டவர்களுக்கு (மாலானவர்க்கு) ஒரு சிறிதும் இரங்காத கல் நெஞ்சு உடையவர் (வன்கண்ணர்) போலும்! என்பது கருத்து. இச்செய்யுள் இகழ்வது போலப் புகழ்தல் (நிந்தாத்துதி) ஆக அமைந்த இருபொருட் (சிலேடை) கூற்று அணியாகும். இறைவன் அன்பர்க்கன்றிப் பிறர் எவர்க்கும் அருளான் என்பது சிறந்ததோர் தத்துவ உண்மையாகும்.

திண்ணருக்கு நன்றாகத் தெரிந்தது:

(5) தேவர்களால் மனமுருகித் துதிக்கப் படுபவரும், பகைவர்களாகிய அசுரர்களின் திரிபுரத்தை எரித்தவரும், என்னுடைய பிறவியை நீக்குபவருமாகிய சிவபெருமானின், திருவண்ணாமலையானது, கண்ணுடையவர் களாகிய திருமாலுக்கும் பிரமதேவருக்கும் காண்பதரியதாயிற்று: ஆனால் கண்ணைப் பறித்து அப்பிவிட்ட திண்ணனார் என்னும் கண்ணப்ப நாயனாருக்கு நன்றாகத் தெரிந்தது. முன்னைய இருவரும் கண்ணிருந்தும் கண்டிலர்; பின்னையவரோ கண்ணை இழந்தும் கண்டனர். இஃது என்ன வியப்பு!

கண்ணருக்கும் போதருக்கும் காண்பரி
தாய்க், கண்பறித்த
திண்ணருக்கு நன்ருய்த் தெரிந்ததே ;—
விண்ணர்உக்குப்
போற்றுவார், அண்ணுர் புரம் எரித்தார்,
என்பிறவி
மாற்றுவார் அண்ணு மலை

இச்செய்யுளில் 'கிருஷ்ணர்' என்னும் வடசொல், கண்ணர் எனத் தமிழில் மருவி வந்ததாயினும், இங்கு அது 'கண்ணை உடையவர்' என்னும் குறிப்புப் பொருளில் வந்தது. தாமரை மலரில் இருப்பவர் என்னும் பொருளில் 'போதர்' என்பது பிரமதேவரைக் குறித்தது. ஆயினும், அதற்கே போதம் (ஞானம்) உடையவர் என்னும் குறிப்புப் பொருளும் இங்கு அமைந்தது. திருமால் கண்ணுடையவராக இருந்தும், பிரமர் போத முடையவராக இருந்தும், இப்பெருமலையைக் காணப் பெற்றிலரே! கண்ணைப் பறித்து இழந்த திண்ணருக்கு, அண்ணு (எட்டாத) மலை நன்ருகத் தெரிந்ததே! அவருடைய பெருமை எத்தகையது? எனக் கண்ணப்பரின் சிறப்பை வியந்தபடி.

மானிடனுக்குத் தேவர் வந்தனை:

(6) சோணுசலனுகிய திருவண்ணுமலை இறைவன் எருதுக் கொடியை உடையவன். அன்பர்கள் மலர் தூவி வழிபட முத்திதருபவன்: காட்டு வேடுவனுகிய கண்ணப்பன் ஊனைப் படைக்க உண்டு மகிழ்ந்தவன். மானிடம் ஆனவன். இத்தகைய மானிடனைத் தேவர்கள் எல்லாம் வந்தனை செய்கின்ருர்களே! இஃது என்ன வியப்பு.

ஆன்இடபக் கொடிச் சோணுசலன்
என்றும், அன்பர்மலர்
தான்இட முத்தி தரும் பெருமான்
என்றும், சம்பு என்றும்,
கான்இட வேடன்முன் ஊன்இட
உண்டது கண்டும், ஒரு
மானிடம் ஆனவனைத் தேவர்
செய்வதென் வந்தனையே?

தேவர்களையே மனிதர்கள் வழிபடுவர். ஆனுல் திருவண்ணுமலையிலே, 'மானிடம் ஆனவன்' தேவர்களால் தொழப்படுகின்ருன். இஃது என்ன வியப்பு என்னும் கருத்தமைய, அதிசய அணியில் இச்செய்யுள் இயன்றுள்ளது. 'மானிடம் ஆனவன்' என்னும் தொடர், மானை இடக் கையில் ஏந்தியவன், அல்லது மான் போன்ற உமாதேவியை இடப்பாகத்திற் கொண்டவன் என்னும் பொருள் உடைய தாகும்.

கருணுசலமாம் கடல்:

(7) வெள்ளம் எப்பொழுதும் பள்ளத்தில் தான் பாயும். வெள்ளம் பள்ளத்திற் பாய்வது தான், என்றும் எங்கும் இயற்கையாகக் காணப் படுவது. ஆனுல் அதற்குமாருக ஒரு வெள்ளம் மட்டும் எப்போதும் பள்ளத்திற் பாயாமல் உயர்ந்த இடத்திலேயே சென்று பாயும் இயல் புடையதாக விளங்குகின்றது. அருணுசலப் பெருமானுடைய கருணுசலம் (கருணை வெள்ளம்) ஆகிய கடல், உள்ளத்தில் ஞானம் (மெய்யுணர்வு) ஓங்கி உயர்ந்துள்ள இடத்தில் அல்லாமல், அறியாமையாகிய இருள் நிறைந்த பள்ளத்தில் ஒரு போதும் சென்று பாய்வது இல்லை.

உள்ளத்தில் ஞானம் உயர்ந்தஇடத் தன்றி,
இருட்
பள்ளத்தில் என்றும் படராதே; —வள்ளல்
அருணு சலப்பெருமான் அம்பிகை ஓர் பாகன்
கருணு சலம்ஆம் கடல்

உள்ளத்தில் மெய்யுணர்வு பெற்ற ஞானி களாகிய மேலோர்களே, இறைவனின் திருவருட்பெருக்கத்தினை எய்துதல் இயலும் என்பது இப்பாடலின் கருத்து. இயற்கை நெறிக்கு முரண்பட்டதொரு செய்தியைக் கூறுதலின், இது விருபகம்(முரண்பாடு) என்னும் அணியாகும்.

படைக்கருவிகள் :

(8) பகைவருடன் போருக்குச் செல்பவர்கள், அம்பு வில் நாண் என்பவற்றை, ஒருங்கே கையில் எடுத்துச் செல்வதுதான் இயல்பான முறைமை. ஆனல் திருவண்ணுமலைநாதர், திரிபுராசுரர்களை எதிர்த்துப் போர் புரியச் சென்றபோது, அவரது தலையின்மேல் அம்பு இருந்தது; வேருரிடத்தில் நாரி (நாண்) இருந்தது. அவர் தமது கையில் எடுத்துச்சென்ற வில்லோ முறிந்திருந்தது. இத்தகையதொரு நிலையிலும் போர் செய்யச் செல்வாருண்டோ?

அடுத்தமதிச் சென்னியின்மேல் அம்பிருக்கும்; மற்ருேர்
இடத்திலே நாரி இருக்கும் ;—தடக்கையிலே
ஏந்துசிலை விட்டிருக்கும் ; எம் அருணை நாதனர்
போந்து புரம்எரித்த போது

இச்செய்யுள் இறைவனின் பேராற்றலை உணர்த்துகின்றது. பேராற்றல் மிக்க அப் பெருமானுக்கு, நம்மைப் போல் படைக் கருவிகள் வேண்டப்படா என்னும் கருத்தை உணர்த்தும் இச்செய்யுளில், அம்பு (பாணம்-கங்கைநீர்), நாரி (நாண்-உமாதேவி), சிலை (வில்-மலை) என்பன, சிலேடைப் பொருளில் வந்தன.

செந்தாமரைக் கண்ணன்:

(9) இவ்வுலகில் மிகப்பெரிய தூலவடிவமாகத் தோன்றி வெளிப்பட்டு, மாபெரும் சோதிப்பிழம்பாக நின்ற மலைவடிவத்தினையும் காண மாட்டாத கண்ணை உடைய ஒருவனைச் செந்தாமரைக் கண்ணன் என்று, சிலர் புகழ்ந்து துதிக்கின்ருர்கள். ஒருபெருஞ் சோதிப் பிழம்பினையே காணுத கண்ணை உடைய ஒருவனைச் செந்தாமரைக்கண்ணன் என்று புகழ்வது, சிறிதும் பொருந்தாது. எனினும், இவ் உலகம் எவ்வாருே அங்ஙனம் புகழ்ந்து போற்றி வருகின்றது. திருவுடைச் செல்வரைக் கண்டால் யார்தான் சிறப்புச் செய்து போற்ருமல் இருப்பார்கள்?

சேணுர் திருவுடைச் செல்வரைக்
காணில், சிறப்புச்செய்து
பேணுதவரும் உண்டோ? புவி
மீதிற் பெருத்தெழுந்து
சோணு சலவடிவாய், வெளியாய்
நின்ற சோதிதனைக்
காணுத கண்ணனைச் சொல்வர்
செந்தாமரைக் கண்ணன் என்றே

இப்பாடல் ''இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு'' என்னும் திருக்குறட் கருத்து அமைந்ததாகும். 'சோதிதனைக் காணுத கண்ணன்' என்றும்' 'செந்தாமரைக்கண்ணன்' என்றும் குறிப்பிட்டது, கவிஞரின் கற்பனைத்திறனையும், சொல்நயத்தையும் உனர்த்தும். இங்ஙனமே 'திருவுடைச் செல்வர்' என்பது சிறப்புமிக்க செல்வம் உடையோர் என்றும், திருமகளைத் தேவியாக உடைய செல்வராகிய திருமால் என்றும், இருவகைக் குறிப்புப் பொருளை உனர்த்தும். 'திருவுடைச் செல்வரைக் காணின் சிறப்புச்செய்து பேணுதவர்களும் உண்டோ?' என்றது, உலகியல்பை வியந்து நயந்து குறிப்பிட்டவாறு.

பிரிவு விலக்கல்

10. கலம்பகம் என்னும் சிற்றிலக்கிய நூல்களில், அகப்பொருள் இலக்கணத் துறைகளின் கருத்துக்களை உட்கொண்டு, சொற்பொருள் நலங்கள் துலங்கப் பற்பல செய்யுட்கள் இடை இடையே வரப் பெறும். அவைகள் கவிஞரின் கற்பனைத் திறனை உணர்த்துவனவாக விளங்கும். 'பிரிவு விலக்கல்' என்பது, ஓர் அகப்பொருள் இலக்கணத்துறை. தலைவன் ஓதுதல் குறித்துத் தன்னைப் பிரிந்து செல்ல முற்படுங்கால், தலைவி, தனது பிரிவாற்ருமைத் துயரம் தோன்ற, ''அருணைப் பதியிலுள்ள குறிஞ்சி நிலத் தலைவரே! அனைவரும் விரும்புகின்ற கல்வியின்மேல் உமக்கு விருப்பம் உள்ள

தாயின், முன்னொரு காலத்தில் இறந்துபோன பெண்ணின் எலும்பை மீண்டும் உயிர்பெற்று எழச்செய்து, பெண்ணாதம்படி பாடியருளிய திருஞானசம்பந்தப் பெருமான் ஆகிய பாவலரைப்போல, நீரும் அருந்தமிழ்ப் பாடல்கள் பாடக் கூடுமாயின், நீர் என்னைப்பிரிந்து செல்லலாம்'' என்று கூறுவதாக,

ஆரும் விரும்பிய கல்விமேல்
ஆசை உமக்குள தாயிடிற்
பாருற என்பொரு பாவையாப்
பாடிய பாவலர் போலவே,
நீரும் அருந்தமிழ் செப்பிடும்
நீர்மை அறிந்திவண் ஏகுவீர்;
மேரு நெடுஞ்சிலை அத்தனுர்
வீறு அருணைபுரி வெற்பரே

எனவரும் இனிய நல்ல செய்யுள், மிகவும் சுவை வாய்ந்தது. கற்றல் வேண்டுமாயின் திருஞானசம்பந்தராகிய சிறந்த பெருங் கவிஞரைப்போன்ற நிலையில் கற்றுத் திகழ்தல் வேண்டும் என்ற பேருண்மையை உணர்த்துவதுடன், ''யான் உம்மைப் பிரிந்தால் உயிர்துறப்பேன், நீர் திருஞானசம்பந்தரைப் போன்ற கல்வி நலன் பெற்றுவரின், அவரைப் போலப் பாடி, நீர் என்னைப் பின்னர் உயிர்த்து எழும்படி செய்ய வேண்டிருக்கும்; அங்ஙனம் செய்யக்கூடுமேல் நீர் என்னை விட்டுப் பிரிந்து கற்பதற்குச் செல்லலாம்'' என்ற கருத்தையும், தலைவி குறிப்பிற் புலப்படக் கூறும்திறன், சுவைத்து மகிழற்பாலது, ''செல்லாமையுண்டேல் எனக்கு உரை; மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்கு உரை'' என்னும் திருக்குறட் கருத்தை யொத்தது இச்செய்யுள்!

இடைச்சியார்

11. தெருவிற் பால் தயிர் கொண்டு சென்று விற்கும் இடைச்சியை நோக்கிக் காதல் கொண்டான் ஒருவன் கூற்றாக அமைத்துப் பாடுவது 'இடைச்சியார்' என்னும் கலம்பக உறுப்பாகும். ''மோர் விற்கும் இடையினத்தைச் சேர்ந்த இப்பெண்ணினுடைய தாமரை மலர் போன்ற இரண்டு அடிகளும் மெல்லினம் (மிருது) ஆகவும், இரு தனங்களும் வல்லினம் (சூதாடுகருவி) போலவும் உள்ளன என்னும் கருத்தமைய,

மோரது கூறும் இடையின
மானுக்கு, முண்டகம்போல்
ஈரடி மெல்லினம்; வல்லினம்
ஆகும் இருதனமே

எனவரும் செய்யுளில், மெய்யெழுத்துக்களின் வகையைக் குறிக்கும் வல்லினம் மெல்லினம் இடையினம் என்னும் இலக்கணக் குறியீடுகள், நயம் சிறக்கக் குறிப்பிடப் பெற்றிருத்தல் காணலாம்.

தலைவியின் இளமைத் தன்மை சாற்றல்

12. தோழியானவள் தலைவனை நோக்கி, எங்கள் தலைவி இன்னும் முதுக்குறைவு எய்தாத மிக இளம் பருவத்தினள். ஆதலின் அவளை விரும்பி, நீர் யானையையும், மானையும் வேட்டையாடிக் கொண்டு வந்தாற்போல, அவைகள் இங்கே ஓடி வந்தனவா? என்று வினவிக்கொண்டும், தழையுடையை ஏந்திக் கொண்டும் வருவதிற் பயனில்லை எனக் கூறுவதாக,

திடநாகம் அனையவரே! தனம் சிறிதும்
காணாத சிறியார் தம்மைக்
கடனாக நீர்வினவிப் பிணை தேடி
முறிதனை ஏன் கைக்கொண்டீரே

எனவரும் செய்யுளில் ''தனம் (நகில், செல்வம்) ஒரு சிறிதும் இல்லாத ஏழைகளின்பால், அவர்கள் வட்டிக்கு வாங்கிய கடன் (அணையும் முறை, பெற்ற பொருள்) கேட்டு, பிணை (மான், பொறுப்பு) தேடி, முறியை (தழையுடையை, பத்திரத்தை)க் கையில் எடுத்துக் கொண்டு, ஏன் வீணாக அலைந்து திரிகின்றீர்கள்'' என்னும் பிறிதொரு பொருட்குறிப்பும், சிலேடை நயம் தோன்ற அமைந்திருத்தல் காணலாம்.

நலம் பாராட்டல் :

13. தலைவன் தலைவியின் அழகைப் புகழ்ந்து கூறுவதாக 'நலம் பாராட்டல்' என்னும் அகப்பொருட்டுறையில் அமைந்து, ''தலைவியினுடைய கண்ணின் அழகுக்குத் தோல்வியுற்று அம்பும் கடலும் கயல்மீனும் மீனராசியும் கடைப்பட்டது (இழிவடைந்தது)'' என்னும் கருத்தமைய வரும்

வள்ளைக் குழைபொரு கண்ணுக்குத்
தோற்று, அம்பும், வாரிதியும்,
கள்ளக் கயலும், இராசியின்
மீனும் கடைப்பட்டதே

என்னும் செய்யுட் பகுதியில் வரும் **கடைப் பட்டது** என்னும் சொல்லின் அமைப்புப் பெரிதும் போற்றுதற்குரியது. அம்பு-கடல்-கயல்-மீனராசி ஆகிய நான்கிற்கும் பொருந்தும் படியாக, அச்சொல் திறம்தெரிந்து தேர்ந் தெடுத்துச் செவ்விதின் அமைக்கப்பெற்றிருக் கின்றது. தலைவியின் கண்ணழகுக்குத் தோற்ற மையினால், அம்பு கம்மியனால் உலைக்களத்தில் கடையப்பட்டது; கடல் (வாரிதி) மந்தர மலை யால் கடையப்பட்டது; கயல்மீன் விற்பனைக் காகக் கடையில் வந்து கிடந்தது; இராசியின்மீன் (மீனராசி), இராசிகள் பன்னிரண்டனுள் இறுதி நிலைப் பட்டதாயிற்று என, ஏற்றபெற்றி ஒரு சொல்லே பல பொருள் படும்படி அமைத்த கவிஞரின் புலமை நலம் புகழுதற்குரியது.

வண்டோச்சி மருங்கணைதல்

14. தலைவன்தலைவியைத் தொடுவதற்குஓர் உபாயம் கருதி, அவளுடைய கூந்தலில் இருக் கின்ற வண்டுகளை நோக்கி, இவள் சிற்றிடை நும் சுமையைப் பொருது இற்றுவிடும் ஆதலால், நீங்கள் விலகிச் செல்க என்று வண்டு களை ஓட்டும் பாவனையில், அவள் அருகில் சென்று நெருங்கி அணைதல், வண்டோச்சி மருங்கணைதல் என்னும் அகப்பொருள் செய்தி. 'மெய்தொட்டுப் பயிறல்' எனவும், இத்துறை வழங்கப்பெறும்.

தார்இலங்கும் மறைமுடிவில் நடித்தருளும்
அருணேசர் தமது நாட்டில்
நாரியர்மேல் மனம் மகிழும் அளியினங்காள்
ஒருவார்த்தை நவிலக் கேளீர்!
ஏர்இருக்கும் கைதைஎலாம் சோறிருக்க,
நீர்இருக்கும் இடங்கள் தோறும்
வேரிமலர்த் தேன்இருக்க, இவர்கூழை
விரும்பிவந்து ஏன் விழுகின்றீரே!

எனவரும் செய்யுளில், ''வண்டுகளே! நீங்கள் சோறு இருக்கவும், கூழை விரும்பித் திரண்டு வந்து ஏன் விழுகின்றீர்?'' என வினவும் முறை யில், சோறு (உணவு, தாழை மலரின் தாது), கூழை (கூந்தல், கூழ் உணவு) என்னும் சொற் களை, ஆசிரியர் அமைத்திருக்கும் நயப்பாடு உவத்தற்குரியது.

முடிவுரை

இன்னோரன்ன எத்தனையோ பல, சொற் பொருட் சுவை நலங்களும், இனிய கற்பனைத் திறங்களும், இசை நலஞ்சான்ற சந்தச்செய்யுட் களும், அழகிய அரிய சாத்திரக் கருத்துக்களும் அமைந்து, திருவருணைக் கலம்பகம் என்னும் இந்நூல், சிறந்தினிது ஓங்கித் திகழ்கின்றது. நாம் அனைவரும் இந்நூலைக் கற்றுச் சுவைத்து, அண்ணாமலை அண்ணலின் அடியிணைகளை வழி பட்டுத், தமிழும் சமயமும் வளர்த்து, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்

இளங்கோவடிகள் சிலைத்திறப்பு விழாவில்,

மாண்புமிகு தமிழக முதல்வர்,

தமிழவேள் டாக்டர்

திரு. கலைஞர் பேருரை

[அண்ணன் உறங்கும் கல்லறைக்கு அருகில் இளங்கோவடிகளின் சிலைத் திறப்பு விழா, 7—11—71 ஞாயிறன்று மாலை மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. விழாவிற்கு வந்திருந்தோரை மாண்புமிகு அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் வரவேற்றார். விழாவிற்குக் கல்வி அமைச்சர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார். சிலம்புச்செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் சிறப்புரையாற்றினர். அதுபோது நமது முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றியசிறப்புரை, இங்கு வெளியிடப்பெறுகின்றது.

—ஆசிரியர்]

''நம்மை ஆளாக்கிய அண்ணன் உறங்கும் பகுதியில், இளங்கோவடிகளின் சிலை அமைவது எவ்வளவு பொருத்தமானது என்பதை, இங்கே பேசியவர்கள் எடுத்துரைத்தார்கள். உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற வேளையில் தமிழ்ச் சான்றோருக்கும்—தமிழகத்து வீரப் பெரு மக்களுக்கும், அண்ணன் தலைமையிலே சிலை வைத்தோம். அன்றைக்கே இளங்கோவடிகளின் சிலை வைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், அதற்கு ஒரு தூண்டுகோல் தேவை என்பதைப் போல்... சென்னையில் ஆண்டு தோறும் நடைபெறும் இளங்கோவடிகள் விழா ஒன்றில், சிலம்புச் செல்வர் அவர்களும் மற்றவர்களும் இளங்கோவடிகளுக்குச் சிலை அமைக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தினர்கள். நானும் ஒப்புக் கொண்டேன்.

இந்த ஆண்டு நடைபெற்ற விழாவில், இன்னும் சிலை வைக்கப்படவில்லையே என்று அவர்கள் குறிப்பிட்டபோது, நான்—

இளங்கோவடிகளின் சிலை தயாராகி விட்டது. விரைவில் சிலை அமைக்கப்படும் என்று உறுதி யளித்தேன். அதன்படி இந்த விழா, யார் தலைமை ஏற்று நடத்த வேண்டுமோ அவர் தலைமை ஏற்க—யார் சிறப்புரை ஆற்ற வேண்டுமோ அவர் சிறப்புரையாற்றிட, பல்லாயிரக் கணக்காகக் கூடியுள்ள உங்கள் வாழ்த்துக்களோடு நடைபெறுகிறது. இங்கே பேசிய சிலம்புச்செல்வர் அவர்கள், தமிழ் உணர்ச் சியுடன் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் விழா வில் பங்கேற்க வேண்டும் என்று குறிப்பிட் டார். நான் மேடையிலிருந்தே காண்கிறேன்—கட்சிச் சார்பில்லாமல் பலர் இங்கே வந்து கலந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களது பெருந்தன்மையை மெச்சுகிறேன். தனிப்பட்ட முறையில் நன்றிதெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக முன்னாள் அமைச்சர் மரியாதைக் குரிய திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள், இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கின்றார். கட்சிப் பற்றற்ற முறையில் பெருந்தன்மை யோடு இந்த விழாவில் பங்கேற்றதற்காகத் தமிழர்கள் சார்பில் அவருக்கு நன்றி தெரி வித்துக் கொள்கின்றேன். சிலப்பதிகாரத்தில் சிலம்புச் செல்வர் அவர்கள், எவ்வளவு ஆர்வமும் எழுச்சியும் கொண்டவர் என்பது நாம் அறிந்ததே. அதே போன்று தி. மு. கழகத் திலுள்ள நாவலரும், மற்ற பிற தமிழ் அறிஞர் களும், அவர்களை ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்களும், சிலப்பதிகாரத்தில் அதிக உடன் பாடு கொண்டவர்கள். புலவர்கள் மத்தியில் மட்டுமே இருந்த சிலப்பதிகாரத்தை, நாடக உருவில்-திரைப்பட உருவில், மக்கள் மத்தியில் கொண்டுவர வேண்டும் எனப் பணியாற்றி, அதில்வெற்றியும் பெற்றோம். பாராட்டுக் களையும் பெற்றிருக்கிறோம்.

முதற் கலைக்கூடம் :

இங்கே சிறோடும் சிறப்போடும் இளங்கோ வடிகள் சிலை நாட்டப்படும் இதே நேரத்தில், இளங்கோ யாத்த சிலப்பதிகாரம் காட்டும் காவிரிப்பூம்பட்டினத்தில்—கடலில் அமிழ்ந்த போன காவிரிப்பூம் பட்டினத்தில்—பல புதை பொருள்களும் அதில் இறைந்து கிடக்கும் ரோமானிய நாணயங்களும் இருக்கும் காவிரிப் பூம்பட்டினத்தில்—சிலப்பதிகாரக் கலைக்கூடம் ஒன்று அமைக்கும் பணி உருவாக்கப்பட்டு, அந்தப் பணி வேக வேகமாக நடைபெற்று வருகிறது. சிலப்பதிகாரக் காவியம்-சிலைகள் உருவத்திலேயே அமைக்கப்படும் கலைக்கூடம் அது! பூம்புகாரில் தொடங்கும் கதையில், கண்ணகி மணக்கோலம் பூணுவது முதல்... மதுரையில் வீரத்தோடு வழக்குரைத்த காதை தொட்டு-சேரன் செங்குட்டுவன் போர்க் கோலம் பூண்டு வடபுலம் சென்று கனகவிசயர் தலைமீது கல்லேற்றிக் கொண்டு வந்து-வஞ்சி மூதூரில் கண்ணகி சிலை அமைத்து வழிபட்டது வரையில் சிலைகளாலேயே-சிற்பங்களாலேயே சிலப்பதிகாரக் காவியம் சொல்லும் வகையில் அமைக்கப்படும் அந்தக் கலைக்கூடப் பணி வெகு விரைவில் முடியவிருக்கிறது. அதன் பின்னர் அந்தக் கலைக்கூடத் திறப்புவிழா விரைவில் நடைபெற்று... வெளிநாட்டினர் சிலம்பு படிக்காமலேயே, சிலப்பதிகாரக் கதையை அறிந்து கொள்ளும் அற்புத முயற்சி அந்தக் கலைக்கூடத்தால் நிறைவேற இருக்கிறது. இப்படிப்பட்ட கலைக்கூடம் இந்தியாவிலேயே இதுதான் முதலாவதாக இருக்கும்.

உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியும் சொல்ல விரும்புகிறேன். கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கும் திரு. **கோவிந்தராசன்** கல்வெட்டுக்களை ஆராய்ந்து வருபவர். குறிப்பாக இளங்கோவ டிகள் புகழ்ந்து வாழ்த்திய கண்ணகி சிலை-சேரன் செங்குட்டுவன் வடித்துத் தந்த கண்ணகி சிலை-எது என்று நாடு முழுவதும் சுற்றிச் சுற்றி ஆராய்ந்தார். கடைசியில் மதுரை மாவட்டத்து எல்லையில் சுருளிமலை என்றோர் மலை உண்டு. அங்கிருந்து ஒரு கல் தொலைவில்-உயர்ந்த பாறை ஒன்றில் மங்கல தேவி கோவிலில் உள்ள சிலையைக் கண்டார். அந்தச் சிலை காளியைப் போல்-துர்க்கையைப் போல்-மாரியம்மையைப் போல்-இலக்குமியைப் போல்-சரசுவதியைப் போல் நான்கு கரங்கள் உள்ள சிலையாக இல்லை! இரண்டு கை யுள்ள பெண் சிலையாக அது இருக்கக்கண்டார். அந்தச் சிலைகூட-இங்கே உள்ள இளங்கோவடி

கள் சிலையைப் போல் பெரியதாக இல்லாமல் இருக்கிறது. இமயத்திலிருந்து கனக விசயர் தூக்கி வந்த கல்-எவ்வளவு அளவினதாகச் சிறியதாக இருக்குமோ-அந்த அளவில்-சிறிய உருவில் அந்தச்சிலை அமைக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல; அந்தச் சிலை செய்யப் பட்ட கல், அந்தப் பகுதியிலுள்ள மலைகள்-பாறைகள் இவற்றைச் சாராததாகவும், இமயத்துக் கல்லைப் போன்று இருப்பதாகவும், கோவிந்தராசன் என்ற அந்தப் பேராசிரியர் அறிவித்திருந்தார். இதைக் கேள்விப்பட்டு நானும், நாவலரும் அவரை அழைத்து உரையாடி, விவரங்கள் அறிந்து-அந்தக் கோவில் இருக்கும் பகுதி கேரள நாட்டைச் சார்ந்தது என்ற காரணத்தால், இதுபற்றிக் கேரள முதல்வர் அச்சுதமேனனுக்குக் கடிதம் எழுதினோம்.

கேரள முதல்வர் பதில்:

இந்தச் சிலை பற்றிய ஆராய்ச்சியை உங்கள் பகுதியில் தொடங்க வேண்டும்; அதற்கான அனுமதி எங்கள் ஆராய்ச்சிப் பகுதியினருக்கு வேண்டும்-எனக் கடிதம் எழுதியிருந்தோம். கேரள முதல்வர் அச்சுதமேனன் அதற்குப் பதில் தந்திருந்தார். ''ஏற்கனவே இதுபற்றி நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்! அதன் தொடர்பாக உங்களது ஆராய்ச் யை நடத்திடலாம்'' என்று அவர் பதில் அனுப்பியிருக்கிறார்! விரைவில் நல்ல முடிவு எடுத்து அவர் அறிவிப்பார் என்று நம்புகிறேன்.

இளங்கோவடிகள் வாழ்த்திய அச்சிலையை-கனகவிசயர் சுமந்து வந்த அச்சிலையை-தமிழர் தம் வீரம் பேசும் அதே சிலையை-நாம் காணக் கூடிய நாள் வெகுதூரத்தில் இல்லை. சென்னையில் இளங்கோவடிகளுக்குச் சிலை அமைப்பது பற்றி எழுந்த 'புகார்' பற்றி, இங்கே சிலம்புச் செல்வர் குறிப்பிட்டார். இளங்கோவடிகளே தமது காப்பியத்தைப் 'புகாரில்' தான் குறிப்பிட்டார். அண்ணா கல்லறைக்குப் பக்கத்தில் கம்பனும், இளங்கோவடிகளும் இருப்பது 'துவார பாலகர்கள்' போல் இருப்பதாகச் சிலர் குறை கூறுகிறார்கள்! அண்ணாவே இருந்தால்கூட ''என்னைத் தாழ்த்தினாலும் கம்பனையும், இளங்கோவையும் உயர்த்திப் பேசி விட்டார்களே! அந்த அளவுக்குப் பாராட்டி விட்டார்களே. அந்த அளவு தமிழுணர்ச்சி பெற்று விட்டார்களே!'' என்றுதான் கூறுவார்.

எங்களைத் தாக்குபவர்கள், ஒரு புதிய முறையைக் கையாளுகிறார்கள். எங்களை இறக்கிப் பேசிட-தாக்கிப் பேசிட-அண்ணாவை உயர்வாகப் புகழ்ந்து பேசத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் இதே ராஜ தந்திரத்தோடு 10 ஆண்டுக் காலம் இருந்தாலாவது பலன் கிடைக்கும்! ஆனால் அடுத்த மாதமே சுயரூபத்தைக் காட்டி விடுகிறார்கள்! அண்ணாவுக்குத் துவார பாலகரா கம்பனும்-இளங்கோவும்-என்றுகேட்டுவிடுகின்றார்கள். பாவம் அவர்களது ராஜதந்திரம் பலவீனமானது. அண்ணா அவர்கள் இருந்து இந்த விழாவைக் காணவில்லையே என்று வருத்தப்பட்டார் சிலம்புச் செல்வர். நானும் இந்த எழில்மிகுந்த விழாவைப் பார்க்கிறேன். அதில் எழுச்சியோடு வந்து கலந்து கொண்ட உங்களையெல்லாம் பார்க்கிறேன். இந்த விழாவை வாழ்த்த வந்த பைந்தமிழ் மனம் கொண்டோரையும் பார்க்கிறேன்!

ஆனால் எனது நெஞ்சம் ஒரு கனவு காண்கிறது; ஒரே ஒரு கணநேரக் கனவு காண்கிறது! இந்த வெண் மணற் பரப்பில் நீள் துயில் கொண்ட அண்ணன் ஒரு நிமிடம் எழுந்து வந்து... ''தம்பிகளே! நான் நினைத்ததையெல்லாம் நீங்கள் செய்கிறீர்கள்''—என ஒரு வார்த்தை சொன்னால் போதும்! ஆனால் அண்ணன் எழுந்து வராத துயிலில் இருக்கிறார். ஆனால் அண்ணன் வடிவில் இங்கே பல்லாயிரக் கணக்கில் தமிழ் நெஞ்சங்கள் கூடியிருந்து வாழ்த்துகின்றன. அந்த வாழ்த்துக்களில் ''அண்ணன் இருக்கிறார்'' என மகிழ்ந்து இந்த விழாவை நடத்துகிறோம்.

—x—

இளங்கோவும், சிலப்பதிகாரமும்

கல்வியமைச்சர்
மாண்புமிகு
நாவலர்
திரு. இரா. நெடுஞ்செழியன், M.A.
அவர்கள்

தமிழுக்கும்-தமிழருக்கும்-தமிழகத்திற்கும் ஈடிலாப்புகழை ஈட்டித் தந்தவர் இளங்கோவடிகள். அத்தகைய பெருமைக்குரியவரின் சிலை திறக்கும் திருநாள் எவ்வளவு சிறப்புக்குரியது என்பது ஒவ்வொரு தமிழனும் எண்ணி மகிழ வேண்டிய நாளாகும். ''யாமறிந்த புலவரிலே கம்பரைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப்போல்-பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை'' என்று பாடினர் பாரதி. அத்தகைய புகழுக்குரிய வள்ளுவர் சிலையையும் கம்பர் சிலையையும் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது திறந்து வைத்தோம். இளங்கோவுக்கு இப்போது சிலை நிறுவியிருக்கிறோம்.

சிலப்பதிகாரம் எவ்வளவு சிறப்புக்குரியது. அதனுல் தமிழகம் எவ்வளவு பெருமை பெற்றது என்பதை ''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு'' என்ற வரிகளால் நாம் அறியலாம். தமிழகத்தின் வாழ்க்கையை-பண்டைய காலப் பழக்க வழக்கங்களைப்-பண்பாட்டைப் படம் பிடித்துக்காட்டும் காப்பியம் சிலப்பதிகாரம். உலகில் இவ்வளவு சிறப்புப் பெற்ற இலக்கியங்கள் மிகக் குறைவு. அத்தகைய சிறப்புக்குரிய இளங்கோவடிகளுக்குச் சிலை எழுப்புவதால் நாம் பெருமையுறுகிறோம். இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது தமிழறிஞர்களுக்குச் சிலை எழுப்பினோம். அது பற்றி இழித்தும் பழித்தும் சொன்னவர்கள் உண்டு. உலகின் ஏனைய நாடுகளில் பெருமைக்குரியவர்களுக்கெல்லாம் சிலை வைத்து மகிழ்ச்சி அடைகின்றனர்.

சென்ற நூற்றுண்டுவரை இலக்கியம்-வரலாறு இன்ன பிற சிறப்புக்களை விளக்கிக் காட்டும் அளவுக்குச் சிறப்பானவர்களுக்கு மற்ற நாடுகளில் சதுக்கத்திற்குச் சதுக்கம்-பூங்காவுக்குப் பூங்கா-சிலை வைத்திருப்பதை நாம் காணலாம். அந்தவகையில் 1300 ஆண்டு

களுக்கு முன் வாழ்ந்த பெருமைக்குரிய தமிழ்ப் புலவர் இளங்கோவடிகளுக்குச் சிலையமைப் பதில் நாம் ஒவ்வொருவரும் பூரிப்படைய வேண்டும். உலகத்தில் மூவாயிரத்திற்கு மேற் பட்ட மொழிகள் இருந்தாலும், தமிழ் இலத் தீன் ஈப்ரு கிரேக்கம் சீனம் போன்ற சில மொழிகள்தான் உயர்தனிச் செம்மொழி எனும் சிறப்புப் பெற்றவை.

அவற்றுள் கிரேக்கம்-இலத்தீன் ஆகிய மொழிகள் பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்கோடு நின்றுவிட்டன. சம்ஸ்கிருத மொழி என்றைக் கும் பேச்சு வழக்கிலே இருந்ததில்லை. சம்ஸ் கிருதம் சிலபேர் மட்டும் கூடிப்பேச ஏற்பட்ட மொழி. சம்ஸ்கிருதம் என்பதற்கே செப்பம் செய்யப்பட்டமொழி என்றுதான் பொருள். ஆனால் தமிழைத்தான் தெய்வத் தமிழ் என் பார்கள். தமிழ் ஒன்றுதான் இன்று ஏட்டு வழக்கிலும், பேச்சு வழக்கிலும் எவ்வளவும் குறையாமல் இருந்து வருகிறது. சீன மொழி ஏட்டிலும் பேச்சிலும் இருந்தாலும், வடகோடி யில் உள்ள சீனன் பேசுவது, தென் கோடியி லுள்ள சீனனுக்குப் புரியாது. ஏட்டிலுள்ளது தான் புரியும்.

இளங்கோவின் சிலையை இங்குத் திறக் கிறோம் என்றால், இந்த நகர் அறிவு வழியில்-ஆற்றல் வழியில் சிறப்புறுகிறது என்பது பொருள். தமிழில் பல நூல்கள் அழிந்து விட்டன. சூழ்ச்சிக்காரர்கள் சிலரால் அழிக்கப் பட்டும் விட்டன. புறநானூறு, ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து பரிபாடல் போன்ற நூல்கள் தமிழ்நாட்டின் பழக்க வழக்கங்களைச் சில குறிப்புகள் செய்யுட்களால் எடுத்துரைக் கின்றனவாகும்.

ஆனால் சிலப்பதிகாரம் ஒன்றுதான் முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டு நாகரிகச் சிறப்பை-பண்பாட்டுச் சிறப்பை-வணிகச் சிறப்பை எடுத் துக்கூறும் காவியமாக இருக்கின்றது. சேர மன்னன் பரம்பரையில் பிறந்தாலும், மூவேந் தர்களையும் காழ்ப்பின்றிப் புகழ்ந்திருக்கின்றார். இன்பம், துன்பம், வீரம் என்ற மூன்று தத்து வத்தில், தன் காப்பியத்தை அமைத்திருக்கிறார். புகார்க் காண்டத்தில் இன்பத்தையும்-மதுரைக் காண்டத்தில் துன்பத்தையும்-வஞ்சிக் காண் டத்தில் வீரத்தையும் காட்டுகிறார். சிலப்பதி காரம் மூவேந்தருக்கும், மூன்று தமிழ் நாட்டுக் கும் பொதுவானது.

அது, இயல் இசை நாடகம் என்ற மூன்று கூறுபாடுகளையும், சிறப்பாக எடுத்துக் காட்டும் நூல். பண்டைத் தமிழரின் இசை நுணுக்கங் களையெல்லாம் எடுத்துக்காட்டும் ஆதாரமாக இருப்பது சிலப்பதிகாரம் தான். நாட்டியக் குறிப்புக்கள் அத்தனையும் அரங்கேற்றுக் காதை யில் மிகத் தெளிவாக விளக்கிக் காட்டியிருக் கிறார். நாட்டியத்திற்குள்ள இலக்கணத்தைச் சிலப்பதிகாரம் போல், வடமொழியில் எந்த நூலும் கூறுவதில்லை. இந்த மண்ணுக்கு ஆக்கம் அளிப்பதற்காக எழுந்த காவியம் சிலப்பதி காரம். 1800 ஆண்டுகட்குப் பிறகு கண்ணகி கதையைத் தந்தவருக்கு நாம் இன்று சிலை எழுப்புகிறோம்.

உலகில் இத்தகைய சிறப்புக்குரிய வரலாறு இல்லாதவர்கள், சாதாரண வரலாற்றை வைத்தே தலையெடுத்து முன்னேறியிருக்கிறார் கள். நமக்கு வரலாற்றுப் பெருமைகள் ஏராள மாக இருந்தாலும், அதைப் பயன்படுத்தி, அதுபோல் நாம் உலகில் மிகச் சிறந்தவர் களாக வாழவேண்டும் என்று எண்ணும் எண்ணமில்லாததால், நாம் வளராமல் இருக் கிறோம். இத்தகைய பெருமைக்குரிய புகழுக் குரியவரின் சிலையைத் திறப்பதைக்கூட இழித் தும் பழித்தும் சொல்பவர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் 'பயனில்சொல் பாராட்டுவானை மகன் எனல், மக்கட்பதடிஎனல்' என்று வள்ளுவர் கூறியிருப்பதற்கிணங்கப் பயனில் சொல் பாராட்டுபவர்களை ஒதுக்கி வைப்போம்.

நாம் செய்யும் தொண்டெல்லாம் தமிழுக் கும், தமிழ் நாட்டுக்கும் ஆற்றும் தொண்டாக அமையட்டும்.

தருமையாதீன குருபூசை விழா

(சிறப்புச் செய்தி)

மாண்புமிகு

திரு. மு. கண்ணப்பன் அவர்கள்,

அறநிலைய அமைச்சர்

தமிழும் சைவமும் தழைத்தினிதோங்க, அரும் பெரும் தொண்டுகள் ஆற்றிவரும் திருமடங்கள் பல. அவற்றுள் ஒன்றாக, இற்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்னர்க் குருஞானசம்பந்தர் என்னும் அருட்பெரும் சான்றோரால் நிறுவப்பெற்ற தருமபுர ஆதீனம், முன்னணியில் சிறந்து திகழ்ந்து வருகின்றது.

அண்மைக் காலத்தில் அவ் ஆதீனத்தின் தலைமை ஏற்று, அதனைப் பல்வேறு துறையிலும், சீரும் சிறப்புமிக வளர்ந்தோங்கச் செய்து, அருளாட்சி செலுத்தியருளியவர், அவ் ஆதீனத்தின் 25-வது குருமகா சந்நிதானமாக விளங்கியிருந்த திருவார் திரு. சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆவர்.

இவர்களின் அருளாட்சிக் காலத்தில், ஆதீனக் கோயில்கள் இருபத்தேழும் (27), மிகச் சிறந்த முறையில் திருப்பணிகள் செய்யப் பெற்று, அவற்றிற்கெல்லாம் மிக விமரிசையாகத் திருக்குடமுழுக்கு விழாக்களும், நிகழ்த்தப் பெற்றுள்ளன. தேவாரப் பாடசாலை, தமிழ்ப்புலவர் கல்லூரி, வேத சிவாகம பாடசாலை, குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி முதலிய பல கல்வி நிறுவனங்கள், இவர்களால் தோற்றுவிக்கப்பட்டுச் சிறந்த முறையில் தொண்டாற்றி வருகின்றன. இவர்கள் சென்னைத் தியாகராயநகரில் நிறுவியருளிய சமயப் பிரசார நிலையம், கடந்த பதினெட்டு ஆண்டுகளாக, மிக்வும் நல்லமுறையில், சமயப் பிரசாரப் பணியைப் புரிந்து வருகின்றது. ஆதீனக் கோயில்கள் அனைத்தும் தூய்மையிலும் துப்புரவிலும் இணையற்று விளங்கி, அனைவராலும் புகழ்ந்து பாராட்டப் பெற்று வருகின்றன.

இத்தகைய சிறந்த நிலையில், அருளாட்சி செலுத்தி வந்த தருமை ஆதீனத் தலைவர் அவர்களின் பூதவுடல் மறைந்த போதிலும், அவர்களின் புகழ் அருள் உடல் என்றும் நிலை பெற்று விளங்கிவரும்; அவர்கள் இனியும் நமக்கெல்லாம் வழிகாட்டி நலம் புரிந்து வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

திருவருளிற் கலந்து மறைந்த குருவருளின் துணைகொண்டு, இப்போது ஞானபீடத்தில் எழுந்தருளியிருப்பவர், திருவார் திரு. சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆவர். இவர்கள் நீடினிது ஞானச் செங்கோல் ஓச்சித் தமிழும் சமயமும் வளர்த்தருள, எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தி வணங்குவோமாக!

குருபூசை விழா

(சிறப்புச் செய்தி)

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.,B.L.,I.A.S

அறநிலைய ஆணையர்

148692

நம் தமிழ்நாடு, ஞானத்தவ முனிவர்கள் பலர் தோன்றி வாழ்ந்த சிறப்புடையது. அவர்களுள், குருஞானசம்பந்தர் என்னும் அருந்தவ முனிவர் பெருந்தகையால் நிறுவியருளப் பெற்றது, தருமபுர ஆதீனம். அதன் 25ஆம் குருமுதல்வராக எழுந்தருளி, அருளாட்சி புரிந்து வந்தவர்கள் கயிலைக் குருமகாசந்நிதானம் என வழங்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள் ஆவர்!

அவர்கள் தமது ஆதீனம், திருக்கயிலாய பரம்பரையைச் சார்ந்தது என்னும் வரலாற்று நெறியின்படி, தமது வாழ்நாளில் திருக்கயிலாய யாத்திரைக்குச் சென்று, கயிலாய தரிசனம் புரிந்து வந்த சிறப்புடைவர்கள்! ஆதலின், இவர்களைக் ''கயிலைக் குருமணி'' என்றே பக்தர்கள் அனைவரும் புகழ்ந்து போற்றிப் பாராட்டி வருகின்றனர்.

ஆதீனக் கோயில்களில் பூசைகளும், விழாக்களும், வழிபாட்டு நிகழ்ச்சிகளும், உரிய முறைப் படி ஒழுங்காக மிகவும் நல்லமுறையில் நடைபெறும் வண்ணம், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் மிகச் சிறப்பாகக் கண்காணித்து அருளாட்சி செலுத்தி வந்தார்கள். அவர்தம் அறிவாற்றல்களும், ஆட்சித்திறனும், கொடை வண்மையும் யாவராலும் வியந்து போற்றப் பெறுகின்றன. எத்தனையோ எண்ணில்லாத பல சமய நிறுவனங்களுக்கும், கல்வி அமைப்புக் களுக்கும், கோயில் திருப்பணிகளுக்கும், பொதுமக்கள் நலத்தொண்டுகளுக்கும், நாட்டுநலச் செயல்களுக்கும், கலைவளர்ச்சிக் கழகங்களுக்கும், மருத்துவமனைகளுக்கும், அவர்கள் மனமுவந்து ஏராளமான நன்கொடைகளை வழங்கியிருக்கின்றார்கள்.

இங்ஙனம் பல்லாற்றானும் சிறந்து திகழ்ந்திருந்த மகாசந்நிதானம் அவர்கள் 'இறக்க முத்தி தரும் தலம்' எனக் கூறப்பெறும் காசிக்குச் சென்று, விசாலாட்சியம்மை சமேத விசுவநாதப் பெருமானை வழிபட்டு மகிழ்ந்து, காசியிலேயே திருவருளிற் கலந்து பரிபூரணம் அடைந்தமை, வியந்து போற்றுதற்குரிய சிறந்த நல்ல பேறு ஆகும்.

அத்தகைய பேறுபெற்ற கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களுக்கு, எனது அன்பும் பணிவும் மிக்க அஞ்சலியினைச் செலுத்துவதுடன், அவர்களுக்குப் பின்னர்த் தற்போது ஞானபீடத்தில் எழுந்தருளியுள்ள 26—ஆவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கும், என் அன்பார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

குருபூசை விழா சிறப்புற நிகழ்க!

தருமை ஆதீனம் தழைத்தினிது ஓங்குக!!

அழைப்பை நோக்கி.........!

தவத்திரு. குன்றக்குடி அடிகளார், M.L.C.

தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும்
திருநக ராக அரசுவீற் றிருந்தவ,
பல்லுயி ருக்கும் பவசம் பந்தம்
மாற்றிய ஞானசம் பந்தமா முனிவ,
அறுபடை வீட்டில் அமர்ந்தருள் வழங்கும்
அண்ணலின் பெயர்தம் முரிமையாகக் கொண்ட
சொற்பொருள் தேடும் சுப்பிரமணிய
தேசிக, கயிலைக் குருமணி! நீயே.
ஒன்றுக்கும் போதா என்றன் உளத்தினில்
புகுந்து நின்றனை, புகலரும் பெரியோய்!
கண்ணப்பன் அன்பைக் காளத்தி யப்பன்
உகந்த தற்குக் காரணம் என்னை?
அங்ஙனமே போலும்நின் அன்பே! ஆனால்,
கண்ணப் பன்தன் கண்ணினைத் தந்தான்.
யாதுநீ பெற்றனை என்பால் ஐயனே!
உமையொரு கேள்வன் உலகுடை நாயகன்
என்னுயிர் எடுத்துக் கொண்டுநின் னுயிரை
மண்ணில் தவழ்ந்திட மனங்கொண் டானலன்!
மன்னு மாமலை கயிலை யதனிலே
எந்தை ஈசன் தனக்குத், தாயிற்
சிறந்த பரிவுடன் செய்ம்முறைப் பாங்குடன்
பணிகள் செய்திடும் அடியா ரிலாத
நிலையில் நினைவந் தழைத்தனன் கொல்லோ?
ஆலால சுந்தரன் என்ன ஆயினன்?
பண்டொரு நாள்அவன் அணுக்கத் தொண்டினை

தருமையாதீனம் 26-ஆவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



தருமையாதீனம் 25-ஆவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

மறந்து காதல் மயக்கங் கொண்டிட
அண்ணல் வருந்திய வருத்தம்ஆ ரறிவார்?
அண்ணல் மட்டும் அறியலாம். அவனோ (டு)
உறையும் உமையா ளும்அறி யாளே!
ஆரு ரன்பால் ஆர்ந்த வேட்கையில்
மாதே வனும்இம் மண்ணிலே நடந்து
மீண்டும் அவனை மீட்டுச் சென்றனன்!
அந்தஆ ரூரன் மீண்டும்அக் காதல்
வழிப்பட் டிருப்பான் போலும்! எதையும்
காதலிக் காமல் தன்னையே காதலித் (து)
இன்புறும் இனிய தோழனை விரும்பிக்
கயிலா யத்துறை நாதன் கடிதனில்
நாடி நின்னை நயந்துபெற் றனனோ?
தகைசால் சிவத்திடம் தன்னலம் இருந்ததே!
அவன்நன் முக வாழ்ந்துபோ கட்டும்!
நின்னுடைப் பேணலில் நிமலன் மகிழ
மண்ணகம் விட்டுனை மறைந்தெ டுத்தனன்.
யானென் செய்வல்? யானென் செய்வல்?
நெஞ்சின் தூய்மை நின்முகம் காட்டக்
குழைத்த அன்பினை நின்சொற் கூட்ட
அணைத்த அணைப்பின் இதத்தினை இழந்தேன்!
எம்போ லியரும் இம்மண் ணுக்கிரை
யாகி விடாமல் அழியா மாண்பு
படைத்துத் தந்தநின் படைப்புத் தொழிலையும்,
ஊனுக் குணவும் உயிர்க்கு ஞானமும்
உவந்தளித் திடும்நின் காத்தல் தொழிலையும்,
நின்றன் சிரிப்பில் எந்தம் பண்டைக்
கொடுவினைக் காரியம் மறைத்திடும் தொழிலையும்,
ஞானத் தழுவலால் எம்மூல மலம்
அவித்தழித் தமைந்த அழித்தல் தொழிலையும்,
இமயம் சார்கருங் காக்கையும் எழிலார்
பொன்மய மாகப் பொலிவது போல
நின்னைச் சார்ந்த நமக்குநின் னுரிமை
தந் (து) எம் பெயரை மாற்றி நின்பெயர்
தந்துநல் இன்பத் தொட்டிலில் வளர்த்ததால்
நின்றன் நிகரிலா அருளும் தொழிலையும்,
ஆக ஐவகைத் தொழிலையும் அறிந்து
நினைந்து நெகிழ்ந்தே உருகு கின்றனம்!

நீர்த்துளி காணாப் பயிரென எம்முயிர்
வாடா தோ? நாம் வாடிடக் கயிலைக்
கடவுள்தாம் மகிழக் கருதிய தறமோ?
கூடல்மா நகர்நெடுஞ் செழியனே அன்று
தன்நிறை தவறினன். அதுபோ லின்று
கூடல்மா நகரில் கொலு அமர்ந்தருள்
ஆலவாய் அண்ணலும் நிறைதவ றித், தான்
மகிழவும், எம்முயிர் வாடவும், நின்னுயிர்
கொண்டுபோய்ச் சேர்த்துக் கொடுமைசெய் தனனே!
கயிலை நாதன் காதலித் தான், நினை;
கயிலை நாதனைக் காதலித் தாய், நீ!
நானே நின்னை நயந்துகா தலித்தே
என்னெஞ் சினிலே நின்னைக் கொண்டனன்!
என்னெஞ் சினின்றும் நினை அகற்றிடக்
கயிலை மலையா னாலும்சா லாதே!
கண்ணால் நின்னைக் கண்டு மகிழத்
தடைசெய் தான் அவன் ஆயினும், நின்னை
நெஞ்சால் நினைந்து மகிழும் உரிமை
எந்தை ஈச னாலும் பறித்திட,
இயலா உரிமை! என்றன் உரிமையே!
நின்னை நினைந்தென் ஆவி கழியும்!
நின்னை உள்ளி நீளுல கத்தில், நீ
பணித்த பணிகளைச் செய்து கிடப்பேன்.
கயிலை நாதன் கழிபெரு வேட்கையால்
நின்னை அழைத்திட நெடிதுகா முற்றனன்;
எனையழைத் திடாமல் தனிநீ ஏகினை!
பெரியோர் செய்கை பொருட்குறிப் புடையது,
எனநான் தேறி இவ்வுடல் தாங்கினன்!
எந்தை கயிலை ஈசன் தன்னிடம்
செந்தமிழ்ச் சுந்தரன் விண்ணப் பித்துச்
சேர மான்பெரு மாளைச் சேர
அழைத்துக் கொண்டது நீஅறி யாததோ?
உண்மையில் உன்னிடம் ஒருவிண் ணப்பம்
நின்னடி வேண்டுவன் யான்அஃ தொன்று!
எந்தை கயிலை ஈசனொடு, நீ
இனிது மகிழ்ந்துறைந் திருக்கும் போழ்தினில்
என்னையும் அழைத்திட ஏடுத்துக் கூறி,
இனியஉத் தரவுபெற் றெனக்(கு) அதை யனுப்பி
அருளுக! நாளும்நின் அழைப்பை
நோக்கியே, வாழ்நாலை நோன்பெனச் செய்வனே!

★

அன்பு அஞ்சலி

தவத்திரு. சாந்தலிங்க இராமசாமியடிகள், பேரூர் ஆதீனம் கோவை-10.

1. அருளோங்கு கைலாய பரம்பரையில்
மெய்கண்டார் அருளும் நூலின்
பொருளோங்கு மெய்ந்நெறியை
உணர்த்து சிவ
ஞானியராய் பொலிந்து தீய
மருளோட்டி உயிர்செழிக்கும வழிகாட்டி
வளர்பீட மரபில் வந்து
தெருளோங்க அருள்தருமை யாதீனக்
குருமுனிவர் சிவமே யானர்

2. திருமடங்க ளிணைந்திடவும் ஆதீனத்
தலைமையினர் சேர்ந்து பேசிப்
பெரும்பணிகள் புரிந்திடவும் தெய்வீகப்
பேரவையின் பெருமை காத்து
ஒருமைபெறும் வாழ்வுக்காம் நல்லுரைகள்
பரிவுடனே ஒதும் நாவர்
அருமைமிகு பணிஇருபத் தாருண்டு
குருபீடத் தருளால் ஆற்றி

3. எம்போன்ற பலர்மகிழ நல்லுரைகள்
பரிவினுடன் இனிதே கூறி
நம்சமய நெறிவளரத் தமிழ்வளரத்
திருப்பணிகள் நாளும் செய்து
இம்மணிடை உயர்காசித் திருநகரில்
இறைவனடி இனிது போற்றி
அம்மையப்ப னிணையடியில் கலந்திட்டார்
ஞாலமுய்ய அருள்க நன்றே.

(நல்வாழ்த்து)

தருமை பீடத் திருபதின்மேல் சாற்றும்
ஆறும் பட்டத்தில்
குருவாய்த் திகழும் அருளாளர் குலவும்
புலமை முதற்பலவும்
மருவும் உளத்தார் சண்முகப்பேர் வாய்த்த
செஞ்சொற் றேசிகர்,அன்
புருவாய் அருளை வளர்த்திடவே உள்ளத்
திறைதாள் போற்றுதுமே.

தோத்திரப் பதிகம்

தவத்திரு. சுந்தர சுவாமிகள் அவர்கள்

கௌமார மடாலயம், கோவை-6

திருக்கயிலைப் பரம்பரையில் திகழ்தருமை ஆதீனத்து
அருக்கனென இருபத்தைந் தாம்பட்டத் தமர்ந்தருளிப்
பெருக்கருளார் ஆட்சியினிற் பெருகும்அறம் பலபுரிந்த
தெருட்பெருக்கார் திருமுகஞ்சால் திருக்கயிலைக் குருமணியே. (1)

குருஞான சம்பந்தக் குருமுதல்வர் தருமையினில்
இருபத்தைந் தாம்பட்டத் திருந்தருளாட் சியைச்சிறப்பாய்
இருபத்தா ருண்டியற்றி இயைந்ததே வாலயங்கள்
இருபத்தே ழினைப்புரந்த இசைக்கயிலைக் குருமணியே. (2)

ஆலயத்தைப் புதுப்பித்தல் அருட்கும்ப நீராட்டல்,
மேலான நூற்பதித்து மிக்கவர்கள் தமக்களித்தல்
ஞாலமிசைப் பலர்க்கான நற்கல்வி அறம்முதலாக்
கோலமிகும் செயற்களவோ! குளிர்கயிலைக் குருமணியே. (3)

திருமுறையிற் பாடல்பெறும் திருத்தலங்கள் அத்தனையும்
ஒருமுறையோ! பலமுறையும் ஒளிர்பாடல் அச்சியற்றிப்
பெருமுறையிற் கொடுபரவிப் பேணுதல வழிபாட்டில்
வருமுறையில் நிகர்யாவர்? வளர்கயிலைக் குருமணியே. (4)

கேதாரம், பசுபதிநாத், கிளர்அமர நாத்,முதலாம்
ஆதார மானசிவன் அமர்ந்தருளும் மலைத்தலங்கள்
சீதார விந்தத்தாள் சிவக்கநடந் தெம்பெருமான்
பாதார விந்தமலர் பணிகயிலைக் குருமணியே. (5)

கயிலாய பரம்பரையாக் காணும்உரை மெய்யாக்கிக்
கயிலாயத் திருமலைக்குக் கவின்அப்பர் எனநடந்து
பயிலும்வழி பாடாற்றிப் பரமனருட் கடற்குளித்த
எயிலமையும் திருத்தருமை எழிற்கயிலைக் குருமணியே. (6)

தெய்வீகப் பேரவையில் திருத்தலைமை ஏற்றருளி
மெய்யைஉல குணர்வதற்காம் மிக்க பிரச்சாரநிலை
செய்தருளித் திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள்
உய்வகையில் வெளியிட்ட உயர்கயிலைக் குருமணியே. (7)

திருத்தருமை யிடத்தெங்கள் திருக்கூட்டத் துடன்வந்து
திருப்பொலிய வழிபாடு செயுங்காலை திருவாளன்
திருப்பெருகு திருநீறும் திருவமுதும் வெளியிடும்
விருப்பமுடன் உவந்தருளும் வியன்கயிலைக் குருமணியே (8)

வந்துதிருத் தருமையினில் வணங்குதொறும் திருநீறு
தந்தருளி ஆசியுடன் தகும்உணவு செயச் செய்து
செந்தகைய பரிவட்டம் சீர்கொள்பிர சாதங்கள்
சந்தமுறத் தந்தருளும் தகைக்கயிலைக் குருமணியே. (9)

பூசைசெபம் தவமாதி புண்ணியர்சேர் காசியினில்
ஓசைபெறச் செய்தருளி ஒளிர்கங்கை நதிக்கரையில்
பேசுபுகழ்க் கேதார கட்டத்தில் பெருமான்தன்
தேசுலவு கயிலையிடைச் சேர்கயிலைக் குருமணியே. (10)

கவுமார மடத்தினிலும் கவின்மருத மலைத்தலத்தும்
சவுகரிய மாய்வந்து தங்குவம்என் றருள்செய்தீர்
உவகைமிக யாமெய்த உற்றருளா விதமென்னே
தவஞான சம்பந்தத் தனிக்கயிலைக் குருமணியே (11)

சாலஅருள் பொழிவிழியும் சாந்தமிகும் முகமலரும்
சீலமுடன் உளம்குளிரச் செப்புதிரு வாய்முதலாக்
கோலமிகும் திருக்காட்சி குவிமனத்தும் படத்தும் அன்றித்
தூலவிழி காண்பதுண்டோ சுகக்கயிலைக் குருமணியே. (12)

எழுசீர் விருத்தம்

திருக்கயி லாய பரம்பரை யாகத்
திகழ்திருத் தருமையா தீனம்
பெருக்கமார் ஞானக் கோல்கரத் தேந்திப்
பிறங்கரு ளாட்சியில் அமர்ந்து
திருத்துநற் புலமை தவங்கொள்சண் முகப்பேர்த்
தேசிக ஞானசம் பந்தர்
குருத்துவம் இருபத் தாறதாக் கொண்டு
குலவருள் பொழிந்தனர் மாதோ.

குருபாதமே கதி.

அன்பின் வணங்கிப் போற்றுகின்றேன்!

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

அருமை பலவும் வாய்ந்தொளிரும் அமிழ்தத் தமிழும் சிவநெறியும்
பெருமை பிறங்கத் தொண்டுகள்தாம் பேணிச் செய்து போற்றிவரும்
உரிமை யுடைய பெருஞ்சிறப்பின் ஓங்கி யுயர்ந்து திகழுவது,
தரும புரநல் ஆதீனம்! அதன்றன் புகழ்ச்சீர் சாற்றரிதால்! (1)

நானூறு ஆண்டு களுக்குமுன்னர் நல்ல குருஞா னசம்பந்தர்,
ஆனேறு அண்ணல் அருள்நெறிதான் அகிலம் எங்கும் தழைத்தொளிர்ந்து,
தேன்நேர் நம்செந் தமிழ்மொழியும் சிறந்தே ஓங்கிச் செழித்தொளிரத்
தான்நேர் தனக்கே எனக்கண்ட தாகும், **தருமை ஆதீனம்!** (2)

அனைய சிறப்பின் ஆதினத்து அருள்சேர் குரவர் பலருள்ளும்
இனிய இருபத் தைந்தாக எண்ணும் முறையில் எழுந்தருளித்
துனியின் றரசு செலுத்தியநம் சுப்ர மண்ய தேசிகர்தம்
நனிநன் றுயர்ந்த அருளாட்சி நலங்கள் அனைத்தும் நவிலரிதால்! (3)

காட்சிக் கெளியர்! கவின்வடிவர்! கற்றோர்ப் போற்றும் பெருந்தலைவர்!
ஆட்சித் திறனும் அறிவாற்றல் அருளே முதலாம் பலவாய
மாட்சி எலாமும் ஒருங்கமைந்த மாத வத்தர்! மலநலத்தர்!
சேட்சி மிகுசீர்ச் சுப்ரமண்ய தேசி கர்தம் சிறப்பென்சொல்கேன்! (4)

புகழின் மிகுநற் சுப்ரமண்யப் புனித குரவர் ஆட்சியின்கீழ்த்
திகழும் சிறந்த திருக்கோயில் இருபத் தேழும் செம்மைமிக
நிகழும் முறையும், மற்றவற்றின் தூய்மை நிலையும், திருப்பணிகள்
தகநன் றியற்று சால்புமெலாம் தகவோர் பலரும் புகழ்வனவாம்! (5)

நல்லார் நங்கள் சுப்ரமண்ய நலஞ்சேர் தேசி கனார் அருளே
வல்லார் வியப்பத் திருக்குறள்நல் உரையின் வளமும், மாண்பமைந்து
பல்லார் புகழத் திருமுறைநூற் பதிப்பும், பிறவும் அளித்தது! அவர்
எல்லா வகைநற் றிருப்பணியும் எண்ணி யுரைத்தல் இயல்வதொன்றோ? (6)

முன்னாள் நந்தம் அப்பர்பிரான் முன்னிக் கண்ட கயிலையினைப்
பின்னாள் போந்த நம்சமயப் பெரியோர் பலர்தாம் கண்டிலரால்!
இந்நாள் அதனைச் சென்றுகண்டிங் கினிது போந்த குருமணிநீ,
என்னே காசிக்கு ஏகி,நன்றே இறைவற் கலந்த எழிற் சிறப்பே! (7)

அன்பருளே ஒருருவாய் அமைகயிலைக் குருமணியே! ஆதீ னத்தில்
துன்றுபல புலவர்குழாத் துள்ஒருவன் எனஎனையும் சூழ்ந்தாட் கொண்டாய்!
ஒன்றலபல ஆண்டுகளா உவந்தெனைநீ, ஆதீனத் துறுவி ழாக்கள்
நன்றுநிகழ் டொழுதெல்லாம் நயந்தழைத்துத் தண்ணளிகள் நலக்கச் செய்வாய்! (8)

(1955 முதல் ஆதீனத்தின் சமயப்பணி, தமிழ்ப் பணிகளில் நெருங்கிய தொடர்பு)

தளியின் நிகழும் விழாக்கள்பல ·தம்முள், இறைவன் அருள்நலத்தைத்
தெளிவின் உணர்த்தும் ஆவணிநன் மூலச் சிறப்பு விழாஅதன்கண்,
எளியன் தனக்கும் ''சித்தாந்தப் புலவர் மணி''என் றொருபெருஞ்சீர்
அளியின் அளித்தாய்! பெரும! நுமை அன்பின் வணங்கிப் போற்றுகின்றேன்! (9)

(1964-ஆம் ஆண்டின் ஆவணி மூல விழா)

சான்றோர் குமர குருபரர்தாம் ''கமலை சார்ந்தேன்: பெயர்குறுகி
வான்றோய் சிவமாய் வயங்கிநின்றேன்'' எனமொ ழிந்தார்; நின்மலர்த்தாள்
யான்றான் சேர்ந்து பெயர்நீண்டேன்! எங்கள் கயிலைக் குருமணியாம்
தோன்றால்! நின்றன் அருளியல்பைத் துதித்துப் போற்றி வணங்குகின்றேன்! (10)

(குமரகுருபரர்: பண்டார மும்மணிக்கோவை, 24)

''நற்பாற் படுத்தி நாடறிய நன்றே அருளால் ஆட்கொண்டு
சொற்பாற் றானவா'' என்று சொல்லித் துதித்து, மணிமொழியார்
கற்பால் நெஞ்சும் கசிந்துருகப் பாடும் கவிதை, எளியேற்கும்
பொற்பாற் பொருந்தப் புரிந்தநினை, அன்பின் வணங்கிப் போற்றுகின்றேன்! (11)

(திருவாசகம்: திருத்தோள்நோக்கம் 4),

ஆண்டில் முதிர்ந்த அறிகட்ஞர்கே பட்டம் அளித்துச் சிறப்பித்தல்
மாண்பு மிகுநம் ஆதீன வழக்கம்! எனினும் பொதுநீக்கி
ஈண்டிங் கென்னைச் சிறப்பித்தாய்! எற்பின் பெரியர் பலர், அதுற்ருர்!
காண்டற் கரிய குருமணி! நின் கருணைத் திறம்யான் புகழ்வதெங்ஙன்? (12)

["பொதுவினில் தீர்த்து எனை ஆண்டான்" —திருக்கோவையார், 146.
"என்னை வேறே ஆட்கொள் அப்பிரான்" —திருவாசகம், கோத்தும்பி, 16].

எண்ணிலபல் விழாக்கள்தொறும் எனைஅழைத்துச் சிறப்பிப்பாய்! இனிது வாழ்த்தித்
தண்ணளிகள் பலபுரிவாய்! "தமிழ்ச்சைவ அறிஞர்களுள் தக்கோன்" என்றே
உண்ணெகிழப் பாராட்டி ஊக்குவிப்பாய்! பரிசளிப்பாய்! உயர்ந்த சீர்த்திப்
புண்ணியநற் குருமணியே! பொருவில்புகழ் நினைப்பணிந்து போற்று கின்றேன்! (13)

உத்தமர்நம் மணிமொழியார் உவந்து,தமை ஆட்கொண்ட உயர்ஆ சான்றன்
வித்தகச்சீர் அருள்நலனை வியந்தேத்தும் பாடல்களின் பொருளின் மெய்ம்மை
அத்தனையும் இன்றெனினும், அவற்றுள்ஒரு சிலவேனும் அறிந்தேன் உய்யப்,
பொய்த்தலிலாப் பெருவள்ளால்! புரிந்தனை நீ; நினைவணங்கிப் போற்று கின்றேன்! (14)

"அத்தாஉன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்!
அருள்நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்?

எத்தனையும் அரியைநீ எளியை ஆனாய்!
எனைஆண்டு கொண்டிரங்கி ஏன்று கொண்டாய்!

இத்தனையும் எம்பரமோ? ஐய ஐயோ!
எம்பெருமான் திருக்கருணை என்னே!" என்று

வித்தகராம் நாவரசர் வியந்து நின்ற
மேன்மைநிலை என்திறத்தும் மேவு வித்தாய்! (15)

(தனித்திருத்தாண்டகம், 8)

வாழி கயிலைக் குருமணிசீர் மாட்சிமிக!
வாழிகுரு ஞானசம்பந் தர்மலர்த்தாள்!—வாழியர்எம்
சண்முக தேசிகராம் சான்ருேர்! தமிழ்சைவம்
கண்முகம்போற் போற்றிமிகக் காத்து (16)

—ஆசிரியர்

———o———

சிலப்பதிகாரம் காட்டும் தெய்வச் செந்நெறி

(தமிழ் விரகன்)

முன்னுரை:

செந்தமிழ் மொழியிலுள்ள சிறந்த காப்பியங்களுள், சிலப்பதிகாரம் என்பது ஒப்புயர்வற்றதொன்று என்பதனை அனைவரும் அறிவர். சிலப்பதிகாரத்தின் இலக்கியச் சிறப்பும், கலை நலமும், பழமையும் பெருமையும் அறிஞர்களாற் பெரிதும் பாராட்டப்படுவன வாகும். *சிலப்பதிகாரத்திற்குப் பல திறப் பெரும் சிறப்புக்கள் உண்டு. எத்தனையோ பல நிலைகளில், சிலப்பதிகாரத்தினை நாம் ஆராய்ந்து சுவைத்து இன்புறலாம்.

சிலப்பதிகாரம் என்பது, ஒரு பெரும் தமிழ்க்கோயில், கலைக்கோயில். வெறும் கோவலன் கண்ணகி கதையை மட்டுமே பொருளாகக் கொண்டதன்று அந்நூல்! அதன்கண், கோவலன் கண்ணகி என்ற இருவரின் கதையை அடிப்படையாகவும், தலைக்கீடாகவும் கொண்டு, பல அரிய கலைச் செய்திகளையும், வாழ்வியல் உண்மைக் கருத்துக்களையும், உலகுக்கு அறிவுறுத்துகின்றார் இளங்கோவடிகள்.

தெய்வ மணம்:

கோவலன் கண்ணகி என்னும் இருவரின் வரலாற்றுக்கு இடை இடையே, இளங்கோவடிகள் தெய்விகக் கருத்துக்கள் பலவற்றை, ஏற்றபெற்றி பொருத்தமுற இயைத்துள்ளார். அவற்றாலேயே சிலப்பதிகாரக் காப்பியம், ஒரு பெரும் தனிச் சிறப்பும் புனிதத் தன்மையும் பெற்று இணையற்று விளங்குகின்றது. இடை இடையே பலப்பல சமய உண்மைகளும், தெய்வங்களைப் பற்றிய இனிய செய்திகளும் பிறவும் கலந்து வரப் பெறுவதனால்தான், சிலப்பதிகாரம் இத்துணைச் சிறப்பைப் பெறுவதாயிற்று. எளிய ஓர் இரும்புத்துண்டை, எல்லாம் வல்ல சித்தர் ஒருவர், தன்னுடைய சித்துத் திறனால் விலையுயர்ந்த பொன்னாக மாற்றும் திறன் போல, கோவலன் கண்ணகி என்னும் இருவரின் தனி வாழ்க்கையைக் கலை நலமும் தெய்வநலமும் கலந்து இயைந்த ஒரு

---

*"The Tamils have developed on lines of their own, and they constitute in my opinion, in some respect, at least, the finest flower of the Dravidian genius. For instance, there is nothing in Telegu to approach, anywhere near the grandeur of thought and sublimity of feeling in 'Silapathikaram' and 'Manimekalai'. The Saiva Siddhantha Philosophy is one of the most striking contributions to the vast mosaic of Hindu culture...''

—Dr. C. R Reddy

பெரும் காப்பியமாக இயற்றியருளினர் இளங்கோவடிகள். செய்வோன் சிறப்பால் செய்பொருள் சிறப்படைகின்றது. அம்முறையில் இளங்கோவடிகளின் கவித் திறனும் தவத் திறனும் ஒருங்கே இயைந்து, சிலப்பதிகாரத் தினைத் தெய்வ நலம் சான்ற ஒரு செந்தமிழ்க் காப்பியமாக விளங்கச் செய்துள்ளன. தொடக்கம் முதல் முடிவு வரை, சிலப்பதிகாரத்தில் தெய்வ மணமும், செந்தமிழ் மணமும் செறிந்து இனிது வீசுகின்றன.

இயற்கைவழிபாடு :

சிலப்பதிகாரத் தொடக்கமே தெய்வமணம் கமழ அமைந்துள்ளது. அதன் முதற் காண்டத்தின் முதற் பகுதியாகிய மங்கல வாழ்த்துப் பாடல் என்பதே, மங்கல முறையில் நன்கினிது தொடங்குகின்றது. தெய்வ நம்பிக்கையில்லாதவரும், இயற்கையைத் தெய்வம் என்று குறிப்பிடுவர். அம்முறையில் ஞாயிறு திங்கள் மழை முதலிய இயற்கைப் பொருள்களையே தெய்வங்களாகப் போற்றுதலுடன், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்தருளியுள்ளார்.

''திங்களைப் போற்றுதும் திங்களைப்போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடை
போன்றிவ்
அங்கண் உலகளித்த லான்!

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறுபோற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்!

''மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற்கு அவன்அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்''

இங்ஙனமே புகார் நகரத்தின் சிறப்பை, அகத்தியர் வாழும் பொதிய மலையோடும், சிவபிரான் வாழும் இமயமலையோடும் ஒப்பிட்டு, அவற்றேடொப்ப நின்று நிலைபெறுவது என்கிறார். கண்ணகியைத் திருமகள் போன்ற வடிவுடையவள்; தீதற்ற அருந்ததி போன்ற கற்புத்திறம் மிக்கவள் என்கின்றார். கோவலனைச் செவ்வேள் போன்றவன் எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாற்றால் சிலப்பதிகாரத்தின் தொடக்கத்திற்கே, இளங்கோவடிகள் ஒரு வகைத் தெய்விக மெருகும் கவர்ச்சியும் ஊட்டியிருத்தல் காணலாம். இங்ஙனம் சிலப்பதிகாரம் முழுவதிலுமே தெய்விக மணமும் ஒளியும் வீசித் திகழக் காண்கிறோம். அவை அனைத்தையும் ஈண்டு எடுத்துக் காட்டுதல் இயலாதாகையால், ஒரு சில முதன்மையான பகுதிகளை மட்டும் இங்கு நாம் காண்போம்.

அருகதேவன் :

1. சிலப்பதிகாரத்தில் சைவம் வைணவம் சாக்தம் சமணம் முதலிய எல்லாச் சமயத்துத் தெய்வங்களும் கொள்கைகளும் பற்றிய குறிப்புக்கள் விரவிவருகின்றன. நாடுகாண் காதை என்னும் பகுதியில், சமணசமயம் பற்றிய செய்திகள் பல வருகின்றன. கோவலனும் கண்ணகியும் புகார் நகரை விட்டு மதுரைக்குச் செல்ல முற்படுகின்றனர். வழியில் கவுந்தியடிகளைச் சந்திக்கின்றனர். மூவருமாகச் சேர்ந்து செல்லுகையில் வழியில் ஒரு சோலையில் சமண சமயத்துச் சாரணர் ஒருவரைக் காண்கின்றனர். அவர் பல அருளுரைகள் கூறுகின்றார். அது கேட்டுக் கவுந்தியடிகள் அருகதேவனை வாழ்த்துகின்றார்.

''அறிவன் அறவோன் அறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் றலைவன் றருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் றேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்

சத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி
இறைவன் குரவன் இயல்குணன் எங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோன் அருகன் அருள்முனி
பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி''.

எனவரும்வரிகளால், சமண சமயக் கடவுளின் பெயர்களும் இயல்புகளும் அவரை வழிபடுதற்குரிய முறைகளும் தெளிவுற, அழகிய இனிய தமிழில் கூறப்பட்டிருத்தலைக் காணலாம்.

திருமால்:

2. காடுகாண் காதை என்னும் பகுதியில் திருமால் திருவேங்கடத்திலும், திருவரங்கத்திலும் எழுந்தருளி விளங்கும் சிறப்பு விவரிக்கப்படுகின்றது. கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மதுரை செல்லும் வழியில், குடமலை நாட்டின் மாங்காடு என்னும் ஊரிலிருந்து வரும் மறையோன் ஒருவனைக் காண்கின்றனர். அவன் அவர்களுக்குத் திருவேங்கடத்திலும் திருவரங்கத்திலும் பெருமாள் எழுந்தருளியுள்ள பெற்றிமையை வியந்து குறிப்பிடுகின்றான்.

நீல நிறமேகம் ஒன்று, பொன் நெடுங்குன்றத்தின் மீது பரவி அகலாது படிந்தமை போல, ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன் ஆகிய பாயலின்கண், காவிரியாற்றின் நடுவில் திருவரங்கத்தில் பலரும் தொழுது புகழும்படி, திருவமர் மார்பன் ஆகிய திருமால் அழகுறப் பள்ளிகொண்டு விளங்குகின்றார். சிறந்த அருவிகள் பாய்கின்ற திருவேங்கடம் என்னும் ஓங்கி உயர்ந்த மலையின் உச்சிமீது, திங்களும் ஞாயிறும் போலச் சங்கு சக்கரங்கள் இருபுறத்தும் ஒளிவிட்டு விளங்க, அவற்றின் நடுவே மின்னல் போலப் பொன்நிற ஆடையை உடுத்து, இந்திர வில் போலப் பலநிற மணிகள் கொண்ட அணிகலன்களைத் தரித்துக்கொண்டு, நன்னிறமேகம் போலச் செங்கண் நெடியோன் ஆகிய திருமால் நின்றருள்கின்றார்.

> "நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்
> பால்விரிந் தகலாது படிந்தது போல
> ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறற்
> பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
> விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
> திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்;
> வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
> ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
> விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
> இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
> மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற்பூண்டு
> நன்னிற மேகம் நின்றது போலப்
> பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
> தகைபெறு தாமரைக் கையி லேந்தி
> நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
> பொலம்பூ ஆடையிற் பொலிந்து தோன்றிய
> செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"

என மாங்காட்டு மறையோன் கூறுவதாக வரும் இச்சிறந்த சிலப்பதிகார வரிகள், திருவரங்க நாதரையும், திருவேங்டநாதரையும் ஆழ்வார்களின் அரிய பாடல்களைப்போல வியந்து போற்றி இருக்கும் திறன் நினைந்து மகிழ்தற்குரியது.

ஆய்ச்சியர் குரவை :

இவ்வாறே ஆய்ச்சியர் குரவை என்னும் பகுதியில், முன்பு ஆயர்பாடியில் கண்ணனும் பலராமனும் நப்பின்னையுடன் கூடி ஆடிய குரவைக் கூத்தினைச் சிலப்பதிகாரம் விவரிக்கின்றது. கோவலன் மதுரைமாநகரில் கொலையுண்டதன் விளைவாக, மாதரி வீட்டில் கண்ணகி தங்கியிருந்த ஆயர்சேரியில், பலவகை உற்பாதங்கள் நிகழ்கின்றன. அதைக் கண்டு மாதரி தன் மகள் ஐயையை நோக்கி, நாம் நமக்குத் தீங்கு எதுவும் நேராமைப் பொருட்டுக் குரவைக் கூத்து நிகழ்த்தித் திருமாலை இறைஞ்சுவோம் எனக் கூறுகின்றாள். அங்ஙனமே ஆயர்பாடியில் பலரும் திருமாலைப் பாடிப் பரவிக் குரவைக் கூத்து ஆடுகின்றனர். இப்பகுதியில் வரும் சிலப்பதிகாரப்பாடல்கள் திருமாலின் பெருமையைத் திவ்வியப் பிரபந்தங்கள் பாடுமாறுபோலவே, சிறந்த முறையில் விளக்கியிருத்தல் காண்கிறோம்.

"மூவுலகும் ஈரடியால்
முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத்
தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத்
தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத
செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத
செவியென்ன செவியே"

"பெரியவனை மாயவனைப்
பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை
விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையும்
திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத
கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம்
கண்ணென்ன கண்ணே ;"

"மடந்தாழும் நெஞ்சத்துக்
கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால்
நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணம்முழங்கப்
பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத
நாவென்ன நாவே
நாராய ணாவென்னா
நாவென்ன நாவே ;"

சக்தி வழிபாடு:

3. வேட்டுவ வரி என்னும் பகுதியில், சக்தி வழிபாடு பற்றிய குறிப்புக்கள் காணப்படு கின்றன. கோவலனும் கண்ணகியும் கவுந்தியடி களுடன் மதுரை நோக்கிச் செல்லும் வழியில் ஒரு காட்டில் ஐயை கோவில் ஒன்றில் தங்கு கின்றனர். அக்காட்டில் வாழ்கின்ற வேட்டுவர் கள், தங்கள் தொல்குடியிற் பிறந்த குமரிப் பெண் ஒருத்தியை ஒப்பனைசெய்து, கொற்றவை (துர்க்கை) யாக வழிபடுகின்றனர். அதனைக் கோவலனும் கண்ணகியும் காணுகின்றனர். இச் செய்தியைக் கூறும் இடத்தில் இளங் கோவடிகள், வேட்டுவர்களின் வழிபாட்டு முறையினையும், அம்பிகையின் சிறப்பினையும் நன்கினிது விளக்கிப் பாடியருள்கின்றார்.

ஆனைத்தோல் போர்த்துப்
புலியின் உரியுடுத்துக்
கானத் தெருமைக்
கருந்தலைமேல் நின்றாயால்
ஞானக் கொழுந்தாய்
நடுக்கின்றி யேநிற்பாய்;"

வரிவளைக்கை வாளேந்தி
மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக்
கலைமிசைமேல் நின்றாயால்
அரியரன்பூ மேலோன்
அகமலர்மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி
விளக்காகி யேநிற்பாய் ;"

சங்கமும் சக்கரமும்
தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமால்
சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த
கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய்
மறையேத்த வேநிற்பாய் ;"

அம்பிகை சிவபிரானைப் போல யானைத் தோல் போர்த்து, புலியின் உரியுடுத்து, விளங்குகின்றாள்; கானத்து எருமைக் கருந்தலைமேல் நிற்கின்றாள்; தேவர்கள் அவளை வணங்குகின்றனர். மறைமேல் மறையாகி அம்பிகை ஞானக்கொழுந்தாய்த் திகழ்கின்றாள்; வளையல் அணிந்த தன் கைகளில் வாள் ஏந்தி, மகிஷாசுரன் என்னும் அரக்கனைக் கொன்று, கலைமான் மீது நிற்கின்றாள்; அரி அரன் பிரமன் என்னும் மும்மூர்த்திகளின் இதய கமலத்தில் ஒளிவிடும் சோதியாகத் திகழ்கின்றாள்; திருமாலின் தங்கையாகலின் அவருக்குரிய சங்கு சக்கரங்களைத் தன் தாமரை போன்ற கைகளில் ஏந்திக் கொண்டு, சிங்கவாகனத்தின்மீது விளங்குகின்றாள்; கங்கை நதியை முடியில் அணிந்த கண்ணுதலோன் ஆகிய சிவபிரானின், இடப்பாகத்தில் மங்கை யுருவாய் மறைகள் ஏத்த வீற்றிருக்கின்றாள். இங்ஙனம் எல்லாம் அம்பிகையைப்பற்றி அடிகளார் பாடியிருப்பது, அவர் காலத்திலிருந்த சாக்தேயக் கருத்துக்களை அழகுற வெளியிடுதல் காணலாம்.

முருகனின் புகழ் :

4. வஞ்சிக் காண்டத்தில் குன்றக் குரவை என்னும் பகுதியில், குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகனின் பெருமையைச் சிலப்பதிகாரம் சிறப்புற எடுத்துப் பாடுகின்றது. அப்பகுதியில், முருகனின் தலங்களாகிய செந்தில் செங்கோடு வெண்குன்று ஏரகம் என்பவை குறிக்கப் பெறுகின்றன. அவனுடைய வேல் புகழ்ந்து போற்றப் பெறுகின்றது. முருகன் ஆறுமுகங்களும் பன்னிரு கைகளும் உடையவனாய் விளங்குகின்றான். கடலினுள் சென்று ஒளித்து மாமரமாக வெளிப்பட்ட சூரனையும், கிரவுஞ்ச மலையினையும் வென்ற முருகனின் வீரச் செயல்கள் குறிப்பிடப் பெறுகின்றன. முருகன் சரவணப் பூம் பொய்கையில் தங்கிச் சரவணபவன் எனவும், தாய்மார் அறுவர் திருமுலைப் பாலுண்டு கார்த்திகேயன் எனவும் விளங்கிய செய்திகள் சுட்டப் பெற்றுள்ளன.

சீர்கெழு செந்திலும்
 செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா
 இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தி
 னுள்புக்குப் பண்டொருநாள்
சூர்மாத் தடிந்த
 சுடரிமலைய வெள்வேலே;''

அணிமுகங்க ளோராறும்
 ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான்
 ஏந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர்
 பீடழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த
 மாறட்ட வெள்வேலே;''

சரவணப்பூம் பள்ளியறைத்
 தாய்மார் அறுவர்
திருமுலைப்பா லுண்டான்
 திருக்கைவே லன்றே
வருதிகிரி கோலவுணன்
 மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றம்
 கொன்ற நெடுவேலே;''

இளங்கோவடிகள்:

இவ்வாற்றால் சிலப்பதிகாரம் முழுவதிலும் பல்வேறு சமயக் கருத்துக்களும் விரவிவந்திருத்தல் காணலாம். ஒப்பற்ற இனிய தெய்விக நலமும் மணமும் சிலப்பதிகாரத்தில் நிரம்பிக் காணப்படுகின்றன. மிகச்சிறந்த அருட்பெருஞ் சான்றோராகிய இளங்கோவடிகளின் இனிய திருவுள்ளச் சால்பின் பயனாகச் சிலப்பதிகாரத்திற்கு இத்தகைய பெரு நலன்கள் விளைவனவாயின. இளங்கோவடிகள் எல்லாச் சமய நூல்களையும் துறை போகக் கற்றுத் தெளிந்திருந்தார். அவர் எல்லாச் சமயங்களிலும் ஈடு

பாடு கொண்டு அவற்றின் நலன்களைச் செவ்விதிற் போற்றி மகிழ்ந்தார். சமயஒற்றுமைக்கும், சமரச வுணர்விற்கும் சிறந்த எடுத்துக் காட்டாக இளங்கோவடிகள் விளங்கியருளினர். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் விளங்கியிருந்த அப்பெருந்தகையார், இந்திய நாட்டு மக்களின் இணையற்ற பண்பு* என, அறிஞர்கள் அனைவரும் இனிது புகழும் சமய சமரச நல் உணர்விற்கு மாபெரும் வழிகாட்டியாகத் திகழ்கின்றார்.

சமய சமரச உணர்வு:

தொல்காப்பியர் திருவள்ளுவர் போன்ற பழந்தமிழ்ச் சான்றோர்களும், சமய சமரச உணர்வு வாய்ந்தவர்களாக விளங்கினர். எனினும், அவர்கள் இளங்கோவடிகளைப் போல இங்ஙனம் பல சமயங்களையும், அவற்றிற்குரிய தெய்வங்களையும் பற்றி இத்துணைத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கிக் கூறிச்சென்றிலர். பிற்காலத்திற் போந்த தமிழ்ப் பெருஞ் சான்றோர்களும், தத்தம் சமயக் கொள்கைகளையும், கடவுளரையும் பற்றியே பெரிதும் பாடியுள்ளனர். ஆனால் இளங்கோவடிகள் ஒருவர்தான், இங்ஙனம் பல சமயங்களையும் ஒருங்கியைத்து முதன் முதலாக விளக்கும் பெருஞ்சிறப்புடையவராகக்காணப்படுகின்றார். தமிழ் இலக்கியங்களில் முதன் முதலாகப் பல சமயங்களையும் இணைத்து இயைத்து, அவ்வவற்றினுடைய தெய்வங்களின் சீரும் சிறப்பும்பற்றி விவரித்துப் பாடி விளக்கிய சிறப்பில், தலையாயதாகச் சிலப்பதிகாரமே திகழ்கின்றது.

முடிவுரை:

எனவே இளங்கோவடிகள் இயற்றியருளிய சிலப்பதிகாரம், நாம் இந்நாளில் கடைப்பிடித்து ஒழுகுதற்குரிய சமய சமரச ஞானத்தையும், தெய்விகச் செந்நெறியையும் தெளிவுற விளக்குகின்றது என்று சுருக்கமாகக் கூறலாம். சிலப்பதிகாரம் காட்டும் தெய்வச் செந்நெறியினை, (Eclecticism) நாம் அனைவரும் பின்பற்றி நலம் பெற முயலுவோமாக.

—ஆசிரியர்.

---

*"An average Indian takes it instinctively granted that everybody is entitled to his own point of view, that between different men and different races of men, differences of taste, habit, thought and religion are inevitable and that these should neither be resented nor obliterated. He bears no animosity against a man because he looks and thinks differently from himself. As a result, they are cosmopolitan in outlook, tolerant in behaviour and open-minded in thought.

It is a fact that India's special gift to mankind has been the ability and willingness of Indians to effect a synthesis of many different elements both of thoughts and of peoples to create in fact, unity out of diversity"

—Prof. C. E. M. Joad,
The Story of Indian Civilisation.

சங்கும், சங்காபிடேகமும்

(சிவநேசன்)

முன்னுரை :

எல்லாம் வல்ல இறைவன் எழுந்தருளி விளங்கும் திருக்கோயில்களில் நடைபெறும் அபிடேகங்கள் பலவற்றுள் 'சங்கபிடேகம்' என்பது ஒன்று. 108 அல்லது 1008 சங்குகளைக் கொண்டு, புனித தீர்த்தத்தை முகந்து இறைவனுக்குச் செய்யப்படும் அபிடேகமே, சங்கபிடேகம் எனப்படும். சங்கானது, இந்து சமயம், புராணம் ஆகியவற்றிற்குப் பெரிதும் தொடர்புடையது. இந்துக்களைப் போலவே, பௌத்தர்களும் சங்கினை மிக்க புனிதமான பொருளாகக் கருதிப் போற்றுகின்றனர். கி.மு, மூன்றும் நூற்றுண்டிற்குரிய அமராவதி, சாஞ்சி முதலிய இடங்களில் உள்ள சிற்பங்களில், சங்கு சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. காற்றினுல் இசைக்கப்பெறும் துளைக்கருவிகளில், மிகப் பழங்காலத்திலிருந்து மனிதன் பழகிவரும் பொருள்களில், சங்கே மிக்க முதன்மையும் தொன்மையும் வாய்ந்ததென்று கருதப்படுகின்றது.

சங்கின் புனிதத் தன்மை :

கோயில் வழிபாடுகளிலும், வைதிகக் கிரியைகளிலும், இல்லறச் சடங்குகளிலும், மலர் தளிர் முதலிய தாவரப் பொருள்களேயன்றி, உயிர்ப்பொருள்களின் உறுப்புப் பகுதிகளும் பயன்படுத்தப்படுகின்றன. தாவரங்களில் நெல் முதலிய தானியங்களும், மரத்திலுல் அமைந்த வழிபாட்டுத் துணைக் கருவிப் பொருள்களும் பயன்படுகின்றன. இவ்வாறே உயிர்ப் பொருள்களின் வெவ்வெறு உறுப்புக் கூறுகளாகிய, தந்தம் கொம்பு பல் தோல் எலும்பு சங்கு முத்து முதலியவைகளும், புனிதப் பொருள்களாகக் கையாளப்படும். கோயில் வழிபாடுகளிலும், வைதிகக் கிரியைகளிலும், இல்லறச் சடங்குகளிலும், யானையின் தந்தம், மானின் கொம்பு. புலிப் பல், மான் தோல், ஆமை ஒடு, மயிற் பீலி, புலித் தோல் முதலியன, பயன்படுத்தப் பெறுதல் காணலாம். அம்முறையில் சங்கும், மிக்க புனிதமுடைய பொருளாய்ப் பூசனைக்குத் துணைபுரியும் நற்கருவியாகப் பெரியோர்களால் கொள்ளப் பெற்றுள்ளது. ஆலயங்களின் வாத்திய வகைகளுள் சங்கு வாத்தியமும் ஒன்று, கோயில் திருவிழாக்களில் சங்குகள் முழங்கும். சிறப்பாகக் கோயில்களுக்குச் சங்கு மிகவும் இன்றியமையாதது. ''செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கு இடுவான் போதந்தார்'' என்னும் திருப்பாவைப் பகுதிக்கு உரிய உரையில், ''சங்கு என்று ஆராதனஉபகரணத்துக்கு உபலக்ஷணம்'' என வருதல் அறியற்பாலது.

சங்கின் பயன்மிக்க தன்மை :

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையில், பலவகைகளில் தொடர்புகொண்டு பயன்படும் பொருளாகச் சங்கு விளங்கி வருகின்றது. சங்குகளை வளையலாகவும், மோதிரமாகவும் செய்து, பெண்கள் தம் கைகளிலும், விரல்களிலும் அணிந்து கொள்வதுண்டு.

> ''வேளாப் பார்ப்பான் வாள் அரம் துமித்த
> வளை களைந்து ஒழிந்த கொழுந்தின் அன்ன
> தளைபிணி அவிழாச் சுரிமுகப் பகன்றை''

எனவரும் அகநானூற்றுப் பாடல் (24) வரிகள், மிகப் பழங்காலத்திலேயே தமிழக மகளிர் சங்கு வளையல்கள் அணியும் பண்புடையராக இருந்தமையினை இனிதுணர்த்தும். இன்றும் வடநாட்டில் சங்கு வளையல் சிறப்பாக மதித்துப்போற்றி அணியப்படுகின்றது. சங்கை அரைத்துத் தேய்த்து, நோய்களுக்கு மருந்தாகவும் வழங்குவர். கண்கட்டி முதலிய அழற்சிகளுக்குச் சங்கைத் தேய்த்துப் பூசிப் பற்றுப் போடலாம். மூலம் முதலிய நோய்களுக்கும் சங்கு மருந்தாகப் பயன்படும்.

குழந்தை பிறந்ததும், அதற்குப் பாலூட்டுவதற்குச் சிறிய சங்கு பயன்படுகின்றது. ஏனைய பிற எல்லாக் கருவிகளைக் காட்டிலும் பாலடையாகப் பயன்படுவதற்கு, சிறிய வெண்சங்கே மிக்க தூய்மையுடையதாய் ஏற்றதாக இருக்கின்றது. இதுமட்டுமேயன்றி, மனிதனின் வாழ்க்கைச் சடங்குகள் பலவற்றில் சங்கு சிறப்பிடம் பெறுகின்றது, திருமண நிகழ்ச்சிகளிலும், திருவிழாக் காலங்களிலும் சங்கு முழங்குவது உண்டு. மனிதன் இறந்த பிறகு பச்சைப் பல்லக்கில் மயானம் செல்கின்றபோதும், சங்கு ஊதப் பெறுகின்றது. பின்னர் அவனுக்குச் செய்யப்படும், இறுதிச் சடங்குகளிலும், சங்கு இன்றியமையாத நிலை பெறுகின்றது. இவ்வாற்றால் மனிதனுடைய வாழ்வின் தொடக்க முதல் இறுதி வரையில், சங்கு தொடர்புடையதாக விளங்கி வருதல் காணலாம்.

தமிழ் நூல்களில் சங்கு :

சங்கின் சிறப்பைப்பற்றித் தமிழ் இலக்கியங்களில் பலவகைக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. கோயில் வழிபாடுகளிலும், நலம் தீங்கு ஆகிய பலவகைச் சமுதாயச் சடங்குகளிலும் சங்கு ஊதப்பெறும். பண்டைக் காலத்திற் கோயில்களில், இராக் காலங்களில் அழைக்கைக்கு உறுப்பாகச், சாமங்கள்தோறும் சங்கு ஊதுதல் வழக்கம். ''புள்ளும் சிலம்பினகாண்; புள்ளரையன் கோயிலில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ'' என்பது திருப்பாவை. ''விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும் ஊரல்ல அடவி காடே'' என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம். திருமாலின் ஐந்து படைகளுள் சங்கும் ஒன்றாகத் திகழ்கின்றது. 'வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை'' எனவரும் முல்லைப்பாட்டு இதனைக் குறிக்கின்றது. திருமால் அடியார்கள், பஞ்ச சம்ஸ்காரங்கள் எனப்படுபவற்றுள் ஒன்றாகச் சங்கின் இலச்சினையைத் தோள் முதலிய இடங்களில் பொறித்துக் கொள்ளுவார்கள்.

சங்குகள், முறையே இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சசன்னியம் என நான்கு வகைப்படும். இப்பி (Oyester Shell Fish) ஆயிரம் சூழ்ந்தது இடம்புரி, இடம்புரி ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி. வலம்புரி ஆயிரம் சூழ்ந்தது சலஞ்சலம். சலஞ்சலம் ஆயிரம் சூழ்ந்தது பாஞ்சசன்னியம் என நிகண்டு நூல்கள் கூறும். சங்கு வெண்ணிறமுடையது ஆதலின், அது தூய்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும். ''கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே, சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'' என்னும் பாடல், சங்கின் வெண்மையையும் தூய்மையையும் புகழ்ந்து குறிப்பிடுதல் காணலாம்.

குடிப்பிறப்பின் தூய்மைக்குக் கவிஞர்கள் சங்கினையே உவமையாகப் பாடுவர். "சங்குடைந்தனைய வெண்தாமரைமலர்த்தடங்கள் போலும் நம்குடி'' எனவரும் சீவக சிந்தாமணிச் (547) செய்யுட் பகுதிக்கு, ''சங்கு சுட்டாலும் நிறம் கெடாதது போலக் கெட்டாலும் தன் தன்மை கெடாத குடி எனினுமாம்; நத்தம் போற்கேடும் (குறள் 735) என்ப'' என்று நச்சினார்க்கினியர்

எழுதியிருக்கும் உரை விளக்கம், இங்கு அறிந்து இன்புறத்தக்கது.

ஆண்மக்களின் கையில் சங்க ரேகை இருப்பது சிறப்புடையது. ''வலம்புரி பொறித்த வண்கை மதவலி'' என வரும் சிந்தாமணிச் செய்யுட் பகுதி, இதனை வலியுறுத்தும். பெண் மக்கள் வலம்புரிச் சங்கு வடிவமாகச் செய்த ஓர் அணிகலனைத் தலையில் அணிந்து மகிழும் செய்தியை 'தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்து' எனவரும் திருமுருகாற்றுப்படை வரி உணர்த்துகின்றது.

சங்கு முழங்குவது நல்ல நிமித்தத்திற்கு அறிகுறி. அரசன் போருக்குப் புறப்படும் போதும், வெற்றி பெற்றுத் திரும்பும்போதும் சங்கு முழங்குவது மரபு. ''கைவிட மாட்டான் என்று ஊது ஊது சங்கே, கனக சபையான் என்று ஊது ஊது சங்கே'' என இராமலிங்க அடிகள் பாடுதல் காணலாம்.

இந்திய நாட்டின் பழம்பெரும் இதிகாசமாகிய மகாபாரதத்தில், பஞ்சபாண்டவர்களும், கண்ணபிரானும், தத்தமக்கென ஒரு சங்கு வைத்துக்கொண்டிருந்தனர். தருமபுத்திரரின் சங்கு அனந்த விஜயம், பீமசேனனின் சங்கு பவுண்டரம், அர்ச்சுனனின் சங்கு தேவதத்தம், நகுலனின் சங்கு, சுகோஷம், சகாதேவனின் சங்கு புஷ்பகம், கண்ணபிரானின் சங்கு, பாஞ்ச சன்னியம் எனப் பெயர் பெற்றிருந்தன.

திருக்குற்ருலம் :

திருக்குற்ருலம் என்னும் தேவாரப் பாடல் பெற்ற புகழ் மிக்க சிறந்த தலத்தில், திருக்குற்ருலநாதர் கோயிலின் வடிவம் சங்குபோல அமைந்துள்ளது என்றும், அதனைச் சுற்றியுள்ள வீதிகள் சங்கின் பற்பல முறுக்குகள் போல வளைந்து வளைந்து அழகுற விளங்குகின்றன என்றும் புகழ்ந்து போற்றித், திருக்குற்ருலத் தலபுராண ஆசிரியர் பாடி மகிழ்கின்ருர்.

திருக்கழுக்குன்றம் :

தொண்டை நாட்டுச் சிவத்தலங்களுள் ஒன்ருக விளங்குவது, திருக்கழுக்குன்றம், அங்கே உள்ள பெரிய திருக்குளம் 'சங்கு தீர்த்தம்' என வழங்குகின்றது. அத்தீர்த்தத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, சங்கு ஒன்று தோன்றுகின்றது. அங்ஙனம் தோன்றும் நாளை ஒரு புனித நாளாகக் கருதி, அத்தலத்தில் விழாக் கொண்டாடப்படுகிறது. அங்ஙனம் அவ்வப்போது தோன்றிய சங்குகள் பல, அக்கோயிலில் தொகுத்து வைக்கப் பெற்றுள்ளன. அச்சங்குகளைக் கொண்டு சங்கபிடேகம் நிகழ்த்தப் பெறுகின்றது.

திருக்கடவூர் :

சிவாலயங்களில் சங்கபிடேகம், எப்போது முதல் தொடங்கிச் செய்யப்பெற்று வருகின்றது என்பதனை அறியத் தெளிவான சான்றுகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. சிவாலயங்கள் பலவற்றில் சங்கபிடேகம் நிகழ்கின்றதாயினும், தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் அபிராமி அம்மை உடனுறை அமுதகடேசுவரர் கோயிலிலேயே, சங்கபிடேகமானது மிகத் தொன்னெடுங் காலமுதல் விழாவாக, நடைபெற்று வருகிறது என்று தெரிகின்றது. முசுகுந்தன் என்னும் சோழவேந்தன் காலத்திலிருந்து, அவனுல் சங்கபிடேகம் தொடங்கி நடைபெற்று வருகின்றது என்று, வழிவழி வரும் மரபுச் செய்தி கூறுகின்றது.

முசுகுந்தன் என்னும் சோழவேந்தன் ஒரு சமயம் திருக்கடவூர் வழிபாட்டிற்குச் சென்ருன். அப்போது அவன், திருக்கடவூர் மயானம் என்னும் தலத்துத் தீர்த்தத்தில் அஃது இறைவன் ஒருவர்க்கு மட்டுமே உரிய தீர்த்தம் என்பதனை அறியாமல் நீராடினுன். அதன் விளைவாக, அவனது உடலை ஒரு கொடிய நோய் பற்றிக்கொண்டு துன்புறுத்தியது. அதனுல் வருந்திய அவன், அதன் காரணமறிந்து, அதற்குக் கழுவாயாக ஆயிரத்தெட்டுச் சங்குகள் கொண்டு, சிறந்த மருந்துப் பொருள்களிட்ட புனித நீரால், இறைவனுக்கு அபிடேகம் செய்வித்து, தனக்கு ஏற்பட்ட பிணி நீங்கி நலம் பெற்ருன். அதுமுதல், ஆண்டு தோறும் கார்த்திகை மாதத்துச் சோமவாரம் ஒவ்வொன்றிலும், திருக்கடவூரில் சங்கபிடேகம் நடைபெற்று வருகின்றது என்பது வரலாறு.

சங்கபிடேகப் பொருள்கள் :

திருக்கடவூர்க் கோயிலில் நிகழ்த்தப் பெறும் சங்கபிடேகத் தீர்த்தத்தில், எட்டு வகைமலர்கள், எட்டுவகைப் பத்திரங் கள், ஏழுவகை மருந்துப் பொருள்கள், ஐந்துவகை உலோகங்கள், ஒன்பது மணிகள், பப்பத்துக் காய்கனிகள், ஏழுவகை நறுமணப் பொருள்கள், ஒன்பது வகைப் பாடாணங்கள், பூச்சுக்கள், ஏழு நதித் தீர்த்தங்கள், தானியங் கள், மூலங்கள், மலைபடுபொருள்கள், கடல்படு பொருள்கள், முதலியன ஆகம முறைப்படி தொகுத்துக் கலக்கப்பெறும். அப்புனித தீர்த்தத்தை ஆயிரத்தெட்டுச் சங்குகளால் முறையே முகந்து, மந்திரங்கள் ஓதி, இறைவ னுக்குத் திருமுழுக்காட்டுவது, அன்பர்களுக்கு அளப்பரும் இன்பக் காட்சியாக விளங்கும்.

சங்கின் ஓங்கார அமைப்பு:

இங்ஙனமெல்லாம் சங்கு ஒரு சிறந்த புனி தப் பொருளாக மதித்துப் போற்றப்படுவதற் குக் காரணம், அதன் அமைப்பும் இயல்பு மேயாகும். சங்கின் அமைப்பானது, உற்று நோக்கி ஆராயுங்கால், பிரணவம் என்னும் ஓங்காரத்தினை ஒட்டித் திகழ்தல் காணலாம்.

''ஓம்எனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே உருவரும்
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓம்எனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே''

— திருமூலர்

என்றெல்லாம், சான்றோர்களால் பலவாறு புகழ்ந்து போற்றப்படும் ஓங்காரமே, இவ் வுலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் மூல காரணமாக அமைகின்றது என, நமது வேதாகமங்கள் விளக்கி உரைக்கின்றன. * ஓசையானது, தான் இயங்கும் முறையாலும், இயக்கப்படும் முறையாலும், அணுக்களைக் கூட்டுதலும், கூட்டி நிலைப்பித்தலும், கூட்டிய வற்றைப் பிரித்தலும் செய்ய வல்லதாதலை, இஞ்ஞான்றை இயற்கைப் பொருள் நூலார் ஆராய்ந்து விளக்கிக் காட்டுதலின், இவ் ஓங்கார ஒலி உலகங்களையும் நம் உடம்புகளையும் தோற்றுவித்தும் நிலைப்பித்தும் அழிப்பித்தும் இயக்கி வருகின்றன என நமது ஞானிகள் நவின்றிருக்கின்றனர்.

உடலும் ஓங்காரமும் :

அண்டம் (Macrocosm), பிண்டம் (Microcosm), என்னும் இரண்டன் இயல்பும் ஒருதன்மையனவே என்பது, ஞானிகள் கண்ட உண்மை. அண்டங்களையெல்லாம் இயக்குவிக் கும் ஓங்கார ஒலியே, பிண்டம் எனப்படும் நமது உடலையும் இயக்கி வருகின்றது. நமது உடம்பின் அகத்துள்ள சிறந்த உறுப்புக்கள் அனைத்தும், ஓங்கார வடிவினவாகவே அமைந் துள்ளன. நமது உடம்பின் வளர்ச்சிக்கும் நிலைபேற்றிற்கும் மிகமிக இன்றியமையாத கருவியான நெஞ்சப்பை (Heart)யின் வடிவ மானது, தாமரை முகை அல்லது சங்கு

---

* "In Indian thought this symbol AUM stands for many things. Every kind of trinity is represented by AUM. Being, nonbeing and becoming; birth, life and death; Prakrti, Jivatman and Paramatman; Sattva, Rajas and Tamas ; past, present and future; Brahma, Vishnu and Siva. The conception of Brahma, Vishnu and Siva emphasises the different aspects of the one Supreme, which contains the three conditions. God by a free act of His will creates, or more philosphically posits, an eternal universe. This positing God is Brahma. He views it, contemplates it, sustains it, enjoys it as being distinct from himself. This God is Vishnu. He receives it back into his own unity as an indissoluble element of his being, then he is Siva. Those who imagine that the three states are exclusive, postulate three personal agencies embodying the three different functions".

— Dr. S. Radhakrishnan.

போன்று, ஓங்கார வடிவமாய் அமைந்திருக்கின்றது. நெஞ்சப்பை மட்டுமேயன்றி, நமது அறிவு விளக்கத்திற்கு நிலைக்களனாய் விளங்கும் மூளையும், நாம் உண்ட உணவை ஏற்று உடம்பிற்கு வேண்டும் சாரத்தை அதனினின்று பிரித்துத்தரும் இரைப்பையும், இரைப்பையினின்று பிரித்துக் கழிக்கப்படுவனவற்றை வெளிப்படுத்தும் மலக்குடரும், சிறு நீர்ப் பையும், ஓங்கார வடிவமாகவே அமைந்துள்ளன. கருப்பையினுள் வளரும் கருவும், முதுமை நிலையில் உடலில் ஏற்படும் கூனும், ஓங்கார வடிவமாகவே உள்ளன. ஒலிகளைக் கேட்பதற்குரிய நமது காதுகளும் ஓங்கார வடிவிலேயே அமைந்திருக்கின்றன. இத்தகைய சிறப்பும் ஆற்றலும் மிக்க ஓங்காரத்தினை வடிவால் ஒத்திருக்கும் காரணம்பற்றியே, சங்கு மிக்க புனிதமுடைய பொருளாகச் சான்றோர்களால் கொள்ளப் பெற்றுள்ளது,

சங்கின் மற்றொரு தன்மை :

இனி வேறு ஒரு குறிப்பும், இங்கு நாம் கருதுதல் கூடும். சங்கின் அமைப்பிற்கும், நமது மனித உடலின் அமைப்பிற்கும், ஒரு பெரிய வேறுபாடு உள்ளது. நமது உடலில், ஊன் என்னும் தசை மேலேயும், என்பு உள்ளேயும் இருக்கக் காண்கின்றோம். ஆனால் சங்கினது அமைப்பில், வன்பகுதியாகிய என்பு மேலே நிற்க, அதற்குள்ளேயே மென் பகுதியாகிய தசை அமைந்திருக்கின்றது, உள்ளே உள்ள ஊன் என்னும் தசை கழிந்த அல்லது கழிக்கப் பெற்ற பிறகே, சங்கு தூய்மையுடையதாக மதித்துப் போற்றப்படுகின்றது.

ஊன் என்னும் தசை கழிந்த சங்கு, மலமாசுகள் அகன்ற நமது மனத்திற்கு அறிகுறியாக அமைகின்றது. தசை கழிந்த சங்கு, புனிதப் பொருளாய்ப் பூசனைக் கருவியாதற்குத் தகுதியுடையதாதல் போல, மலமாசுகள் கழிந்த நமது மனமும், தூய்மையும் புனிதமும் அடைந்து இறைவன் எழுந்தருளத்தக்க இனிய கோயிலாக மாறுகின்றது. மனத்தில் உள்ள குற்றங்கள் நீங்கினால், இறைவனை நாம் நமது மனம் ஆகிய கோயிலின் உள்ளேயே கண்டு இன்புறலாம் என்னும் கருத்தமைய.

''உள்ளத் திருக்கு ஒயில், காணலாம் ஈசனை நம்
உள்ளத் திருக்கோயில் உள்''

எனக் குமரகுருபர சுவாமிகள் கூறியருளிய அரிய பெரிய கருத்தினை, ஒரு வகையில் சங்கின் அமைப்பும் இயல்பும், நமக்குத் தெளிவுற அறிவுறுத்தி நிற்கின்றன எனலாம்.

சேக்கிழாரும் சங்கும்:

இக்கருத்திற்கு அரண் செய்யும் வகையில், பெரிய புராணத்துள் ஆசிரியர் சேக்கிழார் அருளிச் செய்த வருணனைப் பகுதி ஒன்று, அமைந்துள்ளது. அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய, புனிதவதி அம்மையார் அவதரித்தருளிய காரைக்கால் நகரம் பற்றி,

''மானமிகு தருமத்தின்
வழிநின்று, வாய்மையினில்
ஊனமில்சீர்க் குடிவணிகர்
குடிதுவன்றி ஓங்குபதி ;
கூனல்வளை திரைசுமந்து
கொண்டேறி மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம்
பெருகுதிருக் காரைக்கால்''

என்று, சேக்கிழார் பெருமான் வருணித்தருளுகின்றார்.

காரைக்கால் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு பெரும் வணிக நகரம். கடலில் தோன்றுகின்ற குறுகி வளைந்த வெண்சங்குகள், தம்மைக் கடலின் அலைகள் சுமந்துகொண்டு வந்து, கடலுக்கருகேயுள்ள உப்பங் கழியிற் சேர்க்க, அக்கழிக்கு அருகேயுள்ள கானல் என்னும் கடற்கரைச் சோலைகளில் உலாவுகின்றன. அத்தகைய வளம் மிகுந்த நகரம் காரைக்கால், என்பது இதன் பொருள்.

நெய்தல் நிலப் பொருள்கள் எத்தனையோ இருக்கவும், ஆசிரியர் சேக்கிழார் பெருமான், இங்குத் தொடக்கத்திலேயே சங்கினைக் குறிப்பிட்டு வருணனை புரிந்தருள்கின்றார். அதற்கு ஏதேனும் ஓர் உட்குறிப்பு ஆகிய காரணம், இருத்தல் வேண்டும். பின்னர்ப் போதரும் புனிதவதியாரின் வரலாற்றுச் சிறப்பு நிகழ்ச்சியினையே, இங்ஙனம் நமது சேக்கிழார் பெருமான் உள்ளுறையணிநலம் பொருந்தத் தொடக்கத்திலேயே முன்னதாகக் குறிப்பிட்டருள்கின்றார், கடல் என்பது திருவருள். வளை எனும் சங்கு, புனிதவதியார். கடலிற்றோன்றிய சங்கினை, அலைகள் கழியிற் கொணர்ந்து சேர்க்கின்றன. அலைகள்தாம், அம்மையார் ஈடுபட்ட இல்லற வாழ்க்கை நிகழ்ச்சிகள். கடலுடன் தொடர்புடைய கழி, திருவருள் தொடர்பால் நிகழ்ந்த அற்புதச் செயல். கழியிற் கொணர்ந்து சேர்க்கப்பெற்ற சங்கு, கடற்கரைச் சோலையிலே உலவி மகிழ்தல், அம்மையார் திருவருள் இன்பப் பேற்றில் திளைத்து நிற்றல் ஆகியவற்றைச் சுட்டும் நிலையில் உள்ளன.

ஊன் தசை நீங்கிய சங்கு, புனிதம் அடைகின்றது: அதுபோலவே, அம்மையாரும் கணவனுக்காகத் தாங்கிய தசைப்பொதி கழிந்து, வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும் மாட்சிமை பெற்றார். எளிய அஃறிணைப் பொருளாகக் கருதப்படினும், சங்கு தூய்மை மிக்கதாகக் கோயில்களில் ஏற்றுப் போற்றப் படுகின்றது. அதுபோலவே, அம்மையாரும் ஏதோ இழிந்த பேய்வடிவம் பெற்றார் எனினும், அண்டமுற நிமிர்ந்து ஆடும் ஆலங்காட்டப்பர் சேவடிக்கீழ் என்றும் அமர்ந்திருக்கும் பேறு பெற்றுள்ளார்.

இவ்வுள்ளுறைக் குறிப்புகள் இனிதமைய, நமது தெய்வக் கவிஞர் சேக்கிழார் பெருமான், சங்கினையே பற்றுக் கோடாகக் கொண்டு பாடியருளியமை, இங்கு ஓராற்றான் இயைபுபற்றி உணர்ந்து இன்புறுதற்கு உரியது.

முடிவுரை :

இத்தகைய பல சிறப்புக்களையுடைய சங்குகள் கொண்டு, ஆகமங்கள் கூறும் முறைப்படி, கோயில்களில் இறைவனுக்கு ஆற்றப் பெறும் சங்கபிடேக விழாவினை, அன்பர்கள் அனைவரும் கண்டு தொழுது களிப்புற்று, மலமாசுகள் நீங்கிய மனத்தினராய் வைகிச், சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு பெற்று மகிழ்ந்து, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்துய்ந்து, நலமுறுவார்களாக.

—ஆசிரியர்

திருநெல்வேலி, கைலாசபுரம், திரு. கைலாசநாதர் கோயிலில் நிகழ்ந்த நால்வர் பிரதிட்டைக் குடமுழுக்கு விழாவில், மதுரைத் துணையாணையர் திரு. M. A. முருகேசன், B.A., B.L. அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

சென்ன பட்டணத்துச் சட்டம்

MADRAS ACT.

"The translation has not been authorised or accepted as authentic by the Government." Translation by Sri A. S. GNANASAMBANDAM Translation Dept.

—o—

(முற்றொடர்ச்சி)

14. உதவி ஆணையர்களுக்குரிய பிரதேச விசாரணை அதிகாரமும் அதிகாரங்களும் கடமைகளும்; (1) ஆணையாளர் அரசாங்கத்தாரின் அங்கீகாரத்தை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, இந்த மாநிலத்தை டிவிஷன்களாகப் பிரிக்கவேண்டும்; ஒவ்வொரு டிவிஷனும் ஒரு உதவி ஆணையரின் பொறுப்பிலிருக்கவேண்டும்.

(2) யாதொரு உதவி ஆணையர் தமது டிவிஷன் விஷயமாய் இச்சட்டத்திலாவது அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் படியாவது தமக்குக் கொடுக்கப்படுகிற அதிகாரங்களைச் செலுத்தவும், விதிக்கப்பட்டிருக்கிற கடமைகளைச் செய்யவும் வேண்டும்;

ஆனால், ஆணையர் எழுத்துமூலமான உத்தரவினால் ஷை சகல அதிகாரங்களும் கடமைகளுமாவது அவைகளில் யாதொன்றாவது ஷை உத்தரவில் குறிப்பிடக்கூடிய விலக்குகளுக்கும், வரையறைகளுக்கும், திட்டங்களுக்கும் உட்பட்டுச் செலுத்தப்பட வேண்டுமென்றும் செய்யப்பட வேண்டுமென்றும் பிரசித்தம் செய்யலாம்; அப்படி விலக்கப்பட்ட யாதொரு அதிகாரத்தையாவது கடமையையாவது அவர் தாமே செலுத்தலாம் அல்லது செய்யலாம்.

(3) யாதொரு உதவி ஆணையருடைய டிவிஷன் சம்பந்தமாய் அல்லது அந்த டிவிஷனிலுள்ள எவையேனும் நிலையங்கள் அல்லது யாதொரு வகை அல்லது தொகுதியைச் சேர்ந்த ஸ்தாபனங்கள் சம்பந்தமாய் 21, 22, 46, 47 59, 69, 72-வது பிரிவுகள் அல்லது 92-வது பிரிவின் (2) உட்பிரிவு ஆகியவைகளில் குறிப்பிட்டிருக்கிற அதிகாரங்களும் கடமைகளுமல்லாமல் இச்சட்டத்தின்படியாவது அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின்படியாவது ஆணையருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற (வேறு) அதிகாரங்களிலாவது விதிக்கப்பட்டிருக்கிற (வேறு) கடமையிலாவது யாதொன்றை ஆணையர், பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாக அரசாங்கத்தார் ஏற்படுத்தக்கூடிய வரையறைகளுக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டும், பிரித்துக் கொடுப்பதற்கான அதிகாரத்தில் குறிப்பிடக்கூடிய நிர்ப்பந்தங்களுக்கும் திட்டங்களுக்குங்கூட உட்பட்டும், அந்த உதவிக் கமிஷனருக்குப் பிரித்துக் கொடுக்கலாம்.

15. பிராந்தியக் குழுக்கள்:—(1) அரசாங்கத்தார் விளம்பரம்பிரசுரித்து அதன் மூலமாக-

(a) யாதொரு உதவி ஆணையருடைய டிவிஷனிலே அல்லது அதன் பாகத்திலே 46 — வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற கோயில்களல்லாத வேறு சகல கோயில்களுக்காகவும் பிராந்தியக்குழு ஒன்றை அமைக்கவேண்டும்;

(b) யாதொரு பிராந்தியக் குழுவின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அல்லது விசாரணை அதிகாரத்தை மாற்றலாம்; அல்லது

(c) யாதொரு பிராந்தியக் குழுவை நீக்கி விடலாம்:

ஆனல் (b) பகுதி அல்லது (c) பகுதியின் படிக்கான ஒரு விளம்பரம் பிரசுரிக்கப்படுவதற்கு முன்னல், அரசாங்கத்தார் ஆணையருக்கும், சம்பந்தப்பட்ட பிராந்தியக் குழுவுக்கும், அவர்கள் அவ்வாறு செய்ய உத்தேசிப்பதற்கான காரணங்களைத் தெரியப்படுத்தி, ஆணையருக்கோ அல்லது பிரதேசக் கமிட்டிக்கோ ஷெ உத்தேசத்திற்கு எதிரான காரணம் காட்ட ஒரு நியாயமான கால அளவை நிச்சயித்து அவர்களுடைய எவையேனும் ஆலோசனைகளையும் ஆட்சேபனைகளையும் ஆலோசிக்க வேண்டும்.

(2) ஒரு பிராந்தியக் குழு, அடியிற் கண்டவை சம்பந்தமாக, இச்சட்டத்தின்படி அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் படி தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் செலுத்தவும் விதிக்கப்பட்டிருக்கும் கடமைகளை நிறைவேற்றவும் வேண்டும்:—

(i) எக்கோயில்களுக்காக அது அமைக்கப்பட்டிருக்கிறதோ அக்கோயில்களின்;

(ii) 46-வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற குறிப்பிட்ட கட்டளைகளாயிராமல் ஷெ கோயில்களைச் சேர்ந்த குறிப்பிட்ட கட்டளைகள்;

(iii) இச்சட்டத்தின் ஷரத்துக்கள் 3-வது பிரிவின்படி எந்த அறக்கட்டளைகளுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதோ அந்த அறக் கட்டளை ஏற்பாடுகள்;

ஆனல், குறிப்பிட்ட யாதொரு கட்டளை இரண்டு அல்லது பல பிராந்தியக் குழுக்களின் விசாரணை அதிகாரத்துக்குள் அடங்கியிருக்கிற இரண்டு அல்லது பல கோயில்களுடன் சேர்க்கப்பட்டிருந்தால், அல்லது இச்சட்டத்தின் ஷரத்துக்கள் 3-வது பிரிவின்படி விஸ்தரிக்கப்பட்டிருக்கிற ஒரு அறக்கட்டளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியக் குழுவின் விசாரணை அதிகாரத்துக்குள் சொத்துக்களை உடையதாயிருந்தால், ஆணையர் அந்தப் பிராந்தியக் குழுக்களில் எது ஷெ குறிப்பிட்ட கட்டளை அல்லது அறக்கட்டளை விஷயமாய் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் வேண்டுமென்பதை ஆணையர் தீர்மானிக்கவேண்டும்;

மேலும், குறிப்பிட்ட ஒரு கட்டளை சிறிது மட்டும் 46-வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற ஒருகோயிலுடனும் அல்லது பல கோயில்களுடனும் சிறிது மட்டும் அவ்வாறு சேர்க்கப்பட்டிராத ஒரு கோயிலுடனும் அல்லதுபல கோயில்களுடனும் சேர்ந்திருந்தால், குறிப்பிட்ட அந்தக் கட்டளை விஷயமாக ஆணையர் மாத்திரமே அதிகாரங்களைச் செலுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும்வேண்டும்;

16. பிராந்தியக் குழுக்களில் இருக்க வேண்டிய அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையும், அவர்களுடைய உத்தியோகக் கால அளவும், தகுதிக் குறைவுகளும்:—(1) மூன்று பேருக்குக் குறையாமலும் ஐந்து பேருக்கு மேற்படாமலும் அரசாங்கத்தாரால் நியமிக்கப்படக்கூடிய எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்கள் பிராந்தியக்குழு ஒவ்வொன்றிலும் இருக்கவேண்டும்.

(2) இப்பிரிவில் வேறுவிதமாக வெளிப்படையாய் ஏற்பாடு செய்திருப்பது போக மற்றப்படி, யாதொரு பிராந்தியக்குழுவின் ஒரு அங்கத்தினரானவர் தமது நியமனம் செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெசட்டில் அறிக்கையிடப்படுகிற தேதியிலிருந்து மூன்று ஆண்டுகால உத்தியோகம் வகிக்கப்பாத்தியதையுடையவராவர்;

ஆனல், இச்சட்டத்தின் தொடக்கத் தேதியன்று பதவி வகிக்கும் யாதொரு அங்கத்தினர் அரசாங்கத்தார் அது விஷயமாகக் குறிப்பிடக்கூடிய அத்தகைய தேதி வரைக்கும் தொடர்ந்து பதவி வகித்து வரவேண்டும்.

(3) யாதொருவர்—

(a) அவர் இந்து மதத்தைத் தழுவாமலிருந்தால்;

(b) 25 வயதுக்குக் குறைந்தவராகவும் 70 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருந்தால்:

(c) தாம் கடன் தீர்க்கச் சக்தியற்றவ ரென்று அறிவிக்கப்பட்டிருந்தால்;

(d) அவர் சித்தசுவாதீனமற்றவராயிருந்தால் அல்லது அவரை ஒரு பிரதேசக்கமிட்டி அங்கத்தினரின் அலுவல்களை நடத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் தகுதியற்றவராக்குகிற பைத்தியம் அல்லது அங்கவீனம் முதலியவற்றை உடையவராயிருந்தால் அல்லது அவருக்குத் தொழு நோய் அல்லது அருவருக்கத்தக்க யாதொரு வியாதியை உடையவராயிருந்தால்;

(e) அவர் எந்த அறநிலையம் அல்லது எந்தக் கட்டளை விஷயமாய்ப் பிரஸ்தாப பிராந்தியக்குழு அதிகாரங்களைச் செலுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும் செய்கிறதோ அந்த அறநிலையம் அல்லது கட்டளைக்கு அவர் தர்மகர்த்தாவாயிருந்தால் அல்லது அதைச் சேர்ந்த ஓர் அதிகாரியாக அல்லது ஊழியக்காரராக அல்லது அதிலிருந்து யாதொரு ஊதியம் அல்லது ஆதாயம் பெறுபவராக இருந்தால் அல்லது அவர் அவிபக்த இந்துக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவராயிருந்து அதிலுள்ள ஒருவர் அப்படிப்பட்ட ஒரு தர்மகர்த்தாவாகவோ, அதிகாரியாகவோ அல்லது அத்தகைய யாதொரு ஊதியம் அல்லது ஆதாயத்தைப் பெறுபவராகவோ இருந்தால்;

(f) அவர் ஒரு பிராந்தியக்குழு எந்த அறநிலையம் அல்லது குறிப்பிட்ட கட்டளை விஷயமாய் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் செய்கிறதோ அந்த அறநிலையம் அல்லது குறிப்பிட்ட கட்டளையின் யாதொரு சொத்தின் செலவாணியிலிருக்கிற குத்தகை அல்லது செய்து கொண்ட யாதொரு ஒப்பந்தம் அல்லது அவற்றிற்காகச் செய்து கொண்டிருக்கிற வேலையின் பாத்தியதை கொண்டிருந்தால் அல்லது அத்தகைய அறநிலையத்துக்கு அல்லது குறிப்பிட்ட கட்டளைக்குச் சேரவேண்டிய யாதொரு வகையான பாக்கி நிலுவையாயிருந்தால்;

(g) அவர் ஒரு பிராந்தியக்குழு எந்த அறநிலையம் அல்லது கட்டளை விஷயமாய் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் செய்கிறதோ அந்த அறநிலையம் அல்லது கட்டளையின் சார்பாக ஊதியம் பெறும் வழக்கறிஞராக அமர்த்திக் கொள்ளப்பட்டிருந்தால்;

(h) ஒழுக்கக்கேட்டுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு குற்றத்திற்காக ஒரு கிரிமினல் கோர்ட்டாரால் தண்டிக்கப் பெற்று ஷை தண்டனை மாற்றப்படாமலோ அல்லது குற்றம் மன்னிக்கப்படாமலோ இருந்தால்;

(i) ஏற்கனவே வேறு யாதொரு பிராந்தியக் குழுவில் ஒரு அங்கத்தினராயிருந்தால்;

(j) பிராந்தீயக் குழு எந்த நிலையம் சம்பந்தமாய் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் செய்கிறதோ அதன் பற்று சம்பந்தமாக விரோதமாகச் செயலாற்றினால்; ஒரு பிராந்தீயக் குழுவின் அங்கத்தினராக நியமிக்கப்படுவதற்கும் அங்கத்தினராக இருப்பதற்கும் யோக்கியதை அற்றவராவார்.

(4) ஒரு பிராந்தீயக் குழுவின் அங்கத்தினர் ஒருவர்-

(a) (3) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள எவையேனும் யோக்கியதைக் குறைவுகளுக்கு உட்பட்டாலும் அல்லது;

(b) அரசாங்கத்தாருக்கு எழுதியுள்ள அறிக்கை கொடுப்பது மூலமாகத் தமது உத்தியோகத்தை ராஜினமாச் செய்தாலும்;

அவர் உத்தியோகம் வகிப்பது நின்று போகும்.

(5) ஒரு பிராந்தீயக் குழுவின் அங்கத்தினர் ஒருவர் இரண்டு மாதகால அளவுக்குள் அக்குழுவின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு வராவிட்டால் அவர் உத்தியோகம் வகிப்பது நின்று போகும்.

ஆனல், ஒருவர் அவ்வாறு கூட்டங்களுக்கு வராமல் நின்று போனதன் காரணமாக ஓர் அங்கத்தினராயிராமற் போய்விட்டிருந்து, அவர் ஷை மூன்று தொடர்ச்சியான கூட்டங்களில் கடைசி கூட்டத்தின் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் தம்மை மீண்டும் அங்கத்தினராக்கும்படி விண்ணப்பம் செய்து கொண்டால், ஷை குழுவினர், அவ்விண்ணப்பம் வந்து சேர்ந்த பிறகு நடைபெறுகின்ற அடுத்த கூட்டத்திலே,

அங்கத்தினர் பதவியை அவர் மீண்டும் வகிக்கும்படிச் செய்யலாம்; ஆனுல், அங்கத்தினரொருவர் தமது உத்தியோகக் கால அளவில் இரண்டு தடவைக்கு மேற்பட்டு அவ்வாறு மீண்டும் அங்கத்தினராக்கப்படக் கூடாது.

விளக்கம்:—க்வோரம் (நிர்வாகச்சிற்றெண்) இல்லாததால் ஒத்திவைக்கப்பட்ட ஒரு கூட்டமானது, இவ்வுட்பகுதியின் காரியத்துக்காக ஒரு கூட்டம் எனக் கருதப்படவேண்டும்; அல்லது,

(6) ஒரு பிராந்தீயக் குழுவின் அங்கத்தினர் ஒருவர் (3) உட்பிரிவில் சொல்லப்பட்ட யாதொரு தகுதிக் குறைவுகளையுடையவராயிருக்கிருரா என்ற பிரச்சினை எழுந்தால், ஷை பிரச்சினை துணை ஆணையரின் தீர்மானத்திற்கு விடப்படும்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

17. (1) பிராந்தீயக் குழுவின் செயலாளர்;—எந்த டிஷவினுக்காக அல்லது அதன் எந்தப் பாகத்திற்காகப் பிராந்தீயக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த டிவிஷனில் உதவி ஆணையர் அதன் செயலாளராவார்.

(2) பிராந்தீயக் குழுவின் செயலாளருக்குப் பிராந்தீயக் குழுவின் விவாதங்களில் பங்கு எடுத்துக் கொள்ள உரிமையுண்டு; ஆனுல் அவருக்கு அக்குழுவின் கூட்டத்தில் வாக்குப் போட உரிமையில்லை.

(3) குழுவின் ஒவ்வொரு கூட்டமும் தலைவரால் தலைமை வகிக்கப் படவேண்டும்; ஒவ்வொரு கூட்டத்தின் சகல பிரச்சினைகளும் கூட்டத்தில் வந்திருக்கும் அங்கத்தினர்களில் பெரும்பான்மையோரின் வாக்கெடுப்பினுல் தீர்மானிக்கப்படவேண்டும். வாக்குகள் சமமாயிருக்கும் பட்சத்தில், அக்கிராசனருக்கு இருக்கும் இரண்டாவது அல்லது நிர்ணய வாக்கை அவர் போடவேண்டும்

(4) செயலாளர் துணை ஆணையர் மூலமாக பிராந்தியக் குழுவின் கூட்டம், ஒவ்வொன்றினுடைய நடவடிக்கைக் குறிப்புகளின் பிரதி ஒன்றை அக்கூட்டத்தின் தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள் ஆணையருக்கு அனுப்ப வேண்டும்! மேலும் அவர் துணை ஆணையர் மூலமாகப் பிராந்தீயக் குழுவின் நடவடிக்கைகளில் யாதொரு இனத்தின் சம்பந்தமாக அவருடைய சொந்த நோக்கங்களை ஆணையரின் கவனத்துக்குக்கொண்டு வந்துஅவர் அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய நடவடிக்கையைப்பற்றி ஆலோசனை கூறலாம்.

18. விதிகள் செய்ய அரசாங்கத்தாருக்குள்ள அதிகாரம்:— பிராந்தீயக் குழுக்களின் கூட்டங்களைக் கூட்டுவது, அக்கூட்டங்களுக்குரிய நிர்வாகச் சிற்றெண் (க்வோரம்), அக்கூட்டங்களில் வேலை நடந்தேறுவது ஆகிய இவைகளைப் பற்றியும் அக்கமிட்டிகளின் காரியம் நடப்பது சம்பந்தமான சகல விஷயங்களைப் பற்றியும் அரசாங்கத்தார் விதிகள் செய்யலாம்.

19. பிராந்தீயக்குழுவின் காரியம் கிராமப்பிசகு காரணமாகச் சட்ட சம்மதமற்றதாய்விடாதென்பது;— யாதொரு பிராந்தீயக் குழுவின் அமைப்பில் ஒரு குறைபாடு இருந்ததனுல் மாத்திரமே அல்லது அதன் தலைவரோ யாதொரு அங்கத்தினரோ தமது உத்தியோகத்தை வகிக்கத் தகுதியற்றவராயிருந்தாரென்னும் அல்லது அவ்வுத்தியோகத்தை வகித்து வராமற் போய்விட்டாரென்னும் ஏதுவினுல் மாத்திரமே அல்லது தலைவர் அல்லது ஷை குழுவைச் சேர்ந்த யாதொரு அங்கத்தினரின் உத்தியோகத்தில் ஒரு காலி இடம் ஏற்பட்டிருந்த காலத்தில் பிராந்தீயக் குழுவின் ஒரு காரியம் செய்யப்பட்டதென்னும் காரணத்தினுல் மாத்திரமே அக்காரியம் சட்ட சம்மதமற்றதாய் விட்டதாகக் கருதப்படமாட்டாது.

20. பிராந்தீயக்குழு எடுத்துவிடப்படுவதன்பேரில் அதன் அலுவல்களைச் செய்வது:— 15—வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கண்ட (c)—பகுதியின்படிப் பிராந்தீயக் குழு ஒன்று எடுத்துவிடப்பட்டிருந்தால் அது எடுத்துவிடப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் புதிய பிராந்தீயக் குழு ஒன்று அமைக்க வேண்டும்; அதுவரையில் அதனுடைய அதிகாரங்களையும் கடமைகளையும் சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் செலுத்தவும் செய்யவும் வேண்டும்.

— தொடரும்

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய
திருமாலை

[மூலமும் உரையும்]

(முற்றொடர்ச்சி)

'' திருமாலியன் ''

சூதனாய்க் கள்வ னாகித்
தூர்த்தரோ டிசைந்த காலம்
மாதரார் கயற்கண் என்னும்
வலையுட்பட் டழுந்து வேனைப்
போதரே என்று சொல்லிப்
புந்தியிற் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த
அழகனூர் அரங்கம் அன்றே

பொழிப்புரை :

சூதாடுகின்றவனாகவும், களவு செய்பவனாகவும் ஆகிக், காமுகர்களோடு சேர்ந்திருந்த காலத்தில், அழகிய் பெண்களுடைய கயல் போன்ற கண்களாகிய வலையினுள்ளே அகப்பட்டுக் கொண்டு அழுந்திக் கிடக்கின்ற என்னை, இங்கே வா என்று அன்புடன் கூறி, என் உள்ளத்திலே வந்து புகுந்து, தன்னிடத்தில் எனக்கு அன்பை வளரச் செய்த, அழகிய மணவாளனது இருப்பிடம், திருவரங்கம் என்னும் தலமாகும்.

குறிப்புரை :

இப்பாடலின் முதலிரண்டு அடிகளால், தாம் முன்பு இருந்த இழி நிலையையும், பின் இரண்டு அடிகளால் இப்போது பெற்ற நன்மையையும் கூறுகின்றார். ஐம்புல நுகர்ச்சிகளில் ஈடுபட்டு, அதற்குரிய பொருள் தேடுவதற்காகச் சூதாடுதல், களவு புரிதல், தூர்த்தரோடு இசைதல் ஆகிய செயல்களில் தாம் ஈடுபட்டிருந்ததாக, உலகவரின் குற்றங்களை ஆழ்வார் தம்மீது ஏற்றி உரைத்துக் கொண்டருளுகின்றார். சிற்றின்பமாகிய உலகியலில் ஈடுபட்டு நிற்பதனை ''மாதரார் கயற்கண் என்னும் வலையுட்பட்டு அழுந்துவேன்'' என்று, ஆழ்வார் குறிப்பிட்டுக் கொண்டருளினர். இங்ஙனம் நெறியல்லா நெறிச்சென்று கொண்டிருந்த தம்மை, இறைவன் தானே வலிந்து வந்து ஆண்டு கொண்டான் என்னும் செய்தியைப் ''போதரே என்று சொல்லிப் புந்தியில் புகுந்தான்'' என்பதனல் புலப்படுத்தினர். இறைவன், தமது கடியகொடிய உள்ளத்தையும் ஈர்த்து ஆட்கொண்டருளித் தன்பக்கல் ஈடுபடச்

செய்து கொண்டதனுல், இறைவனை ''ஆதரம் பெருகவைத்த அழகன்'' என்று புகழ்ந்து போற்றினர். (16)

விரும்பிநின் றேத்த மாட்டேன்
விதியிலேன் மதியொன் றில்லை
இரும்புபோல் வலிய நெஞ்சம்
இறையிறை யுருகும் வண்ணம்
சுரும்பமர் சோலை சூழ்ந்த
அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டென்
கண்ணிணை களிக்கு மாறே

பொழிப்புரை :

விருப்பம் கொண்டு, ஒருநிலையில்நின்று, யான் புகழ்ந்து துதிக்கமாட்டேன். கை கூப்புதல் முதலிய செல்களைச் செய்யும் பேறும் யான் பெறவில்லை; இறைவன் ஒருவன் உண்டு என்று உணர்கின்ற அறிவுநலமும், எனக்குச் சிறிதும் இல்லை. இத்தகைய என்னுடைய இரும்பைப் போன்ற கடினமான நெஞ்சானது, சிறிது சிறிதாக உருகும்படி, வண்டுகள் பொருந்திய சோலைகளால் சூழப்பெற்ற, சிறப்புமிக்க திருவரங்கத்தைக் கோயிலாகக் கொண்டருளிய இனிய கரும்பு போல்பவன் ஆகிய இறைவனை, என்னுடைய இரண்டு கண்களும் காணும் பேறு பெற்றுக் களிப்புறு கின்ற தன்மை எத்தகையது!

குறிப்புரை :

தரித்திரனுக்கு நித்திய பாயசம் கிடைத் தாற் போலே, ஒருவகைத் தகுதியும் இல்லாத கல்நெஞ்சுடைய தமக்கு அழகிய மணவாளன் காட்சி அளித்த கருணையை, ஆழ்வார் வியந்து புகழ்ந்தவாறு. இறைவனை விரும்புதலும், துதித்தலும், இறையருளைப் பெறுவதற்கு உரிய எளிய இனிய வழி. தாம் அதனைச் செய்திலர் என்பார், ''விரும்பி நின்று ஏத்த மாட்டேன்'' என்றுர். உள்ளம் ஈடுபடா விட்டாலும், வெறும் உடலளவிலாவது கைகூப்புதல் முதலிய செயல்களைச் செய்யலாம்; அதற்குரிய நற்பேறும் தமக்கு வாய்த்திலது என்பார், ''விதியிலேன்'' என்றுர். வணங்கு தலும் துதித்தலும் செய்யாவிட்டாலும், அறிவினல் இறைவன் ஒருவன் உளன் என்பதைச் சிந்தித்து உணர்தலேனும் செய்யலாம்; அதற்கும் தமக்கு வாய்ப்பில்லை என்பார், 'மதியொன்றும் இல்லை' என்றுர். உருக்கம் சிறிதுமில்லாத தமது உள்ளத்தினை ''இரும்புபோல் வலிய நெஞ்சம்'' என்று இகழ்ந்து பழித்தார். 'இரும்புபோல் நெஞ்சம்' என்றதே அமையுமாயினும், 'வலிய' என்று அடைமொழி கொடுத்தது, இரும்பை நெருப்பிற் காய்ச்சியேனும் உருக்கிக் கொள்ளுதல் இயலும்; என் நெஞ்சத்தினை உருகச் செய்தற்கோ எதனுலும் இயலாது என்பது உணர்த்துதற்கு. எண்ணுந்தொறும் இன்பம் பயக்கும் இறைவனை, உண்ணுந் தொறும் சுவை பயக்கும் கரும்பாக உருவகம் செய்தார். இறை இறை—சிறிது சிறிது. ''உருகும் வண்ணம் கோயில் கொண்ட கரும்பு' என இயையும். (17)

இனிதிரைத் திவலை மோத
எறியும்தண் பரவை மீதே,
தனிகிடந் தரசு செய்யும்
தாமரைக் கண்ணன் எம்மான்.
கனியிருந் தனைய செவ்வாய்க்
கண்ணனைக் கண்ட கண்கள்,
பனியரும் புதிரு மாலோ!
என்செய்தேன் பாவி யேனே!

பொழிப்புரை :

அலைகளில் உண்டான நீர்த் திவலைகள் இனிதாக வீசக், கொந்தளிக்கின்ற குளிர்ந்த கடல்போன்ற காவிரியாற்றின் நடுவே, தனியே வந்து கண் வளர்ந்தருளி, அருளாட்சி புரிகின்ற தாமரைபோன்ற கண்களை உடையவனும், எமக்குத் தலைவனும், கோவைக்கனி போன்ற

சிவந்த இதழை உடையவனுமான, கண்ணபிரானைக் காணப்பெற்ற கண்களி லிருந்து குளிர்ந்த மகிழ்ச்சிக் கண்ணீர் பெருகா நின்றது. கண்ணாரக் கண்டு களிப்பதற்கு நற்பேறு இல்லாத நான் யாது செய்வேன்?

குறிப்புரை :

திருவரங்கத்தின் அழகிய மணவாளனைக் காணப்பெறினும், அவனது அழகினை மேலும் மேலும் கண்டு களிப்பதற்கு, இம் மகிழ்ச்சிக் கண்ணீர் ஒருவகையில் தடையாக நிற்கின்றது என்று, ஆழ்வார் நொந்து கொள்ளுகின்றார். இஃது இறையருள் அனுபவத்தில், ஒரு சிறந்த இன்ப நிலையாகும். பரவை-கடல்; அஃது இங்கே காவிரியாற்றினைக் குறித்து வந்தது. நித்தியரும் முத்தரும் பெருந்திரளாகச் சூழந்து வணங்கி நிற்கும் வைகுண்டத்தை விட்டு, இறைவன் தனக்கு உலக மக்களுள் ஒருவ ரேனும் கிடைக்கக் கூடுமா? என்ற அருட் பெருக்கால், திருவரங்கத்தில் வந்து எழுந்தருளி யிருத்தலின், ''தனி கிடந்து'' என்றார். அரசு செய்தலாவது, பகைவரை அழித்தல், அஃதா வது யான் எனது என்றிருக்கும் உலக மக்களின் இழி நிலைமையினைப் போக்கி, அவர்களைப் ''போற்றி'' என்னும்படி செய்து ஆட்கொண்டு அருளுதல். பெரிய பெருமாளைச் சேவித்தால், அவதாரத்திற் பிற்பட்டவர்களுக்கும் உதவுவ தற்காகக் கண்ணபிரான்தான், இங்கு வந்து கண்வளர்ந்தருளுகின்றான் என்று நினைக்கும்படி இருக்குமாதலால், 'கண்ணனை' என்று குறிப் பிட்டார்.

''யசோதைப் பிராட்டி பிள்ளைமணம் கன்றாமல் தீம்பிலே கைவளரும்படி வளர்த்த மொசு மொசுப்பெல்லாம் பெரிய பெருமாள் பக்கலில் தோற்றி இருக்கும்; வசிட்டர் முதலிய முனிவர்களாலே நன்கு பயிற்சி அளிக்கப் பெற்று, வார்ந்து வடிந்த பணிவெல்லாம் தோன்றும்படியான சக்கரவர்த்தித் திருமகனை நினைக்கும்படியிருக்கும், நம்பெருமாளைக் கண்டால்'' என்று இவ்விடத்திற்குப் பட்டர் விளக்க வுரை அருளிச் செய்வர் என்பது ஐதிகம். இனிது+திரை 'இனிதிரை' என வந்தது. 'இருந்தால் அனைய' என்பது 'இருந்தனைய' என மருவிற்று. *(18)*

குடதிசை முடியை வைத்துக்
  குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித்
  தென்திசை இலங்கை நோக்கிக்,
கடல்நிறக் கடவுள் எந்தை
  அரவணைத் துயிலுமா கண்டு,
உடல்எனக்கு உருகு மாலோ
  என்செய்கேன் உலகத் தீரே!

பொழிப்புரை:

உலகத்திலுள்ளவர்களே! கடல்போன்ற கரிய நிறத்தை உடைய கடவுளான, அழகிய மணவாளனாகிய எம்பெருமான், மேற்குத் திக்கில் திருமுடியை வைத்தருளியும், கிழக்குத் திக்கில் திருவடிகளை நீட்டியும், வடக்குத் திக்கில் திருமுதுகைக் காட்டியும், தெற்குத் திக்கில் விபீடணன் வாழும் இலங்கையை அன்புடன் பார்த்துக் கொண்டும், ஆதிசேட னாகிய படுக்கையில் அறிதுயில் கொள்ளும் தன்மையைக் காண்பதனால், என்னுடைய உடலானது உருகா நிற்கும். ஐயோ! நான் என்ன செய்வேன்!

குறிப்புரை :

பெருமாள் பள்ளிகொண்டருளும் அழகினைக் காண்பதனால், கண் முதலிய உறுப் புக்கள் மட்டுமேயன்றி, உறுப்பியாகிய தமது உடலும் உருகி நிற்பதை உணர்ந்து, ஆழ்வார்

வியப்புறுகின்றார். பெருமாள், தாம் நித்திய விபூதி, லீலா விபூதி என்னும் இரண்டற்கும் தலைமை வகித்தலை உணர்த்தக் குடதிசையில் முடியை வைத்தார். எல்லா உலகமும் சரண் அடைந்து உய்வதற்காகக் குணதிசையில் பாதம் நீட்டினார். ஆழ்வார்களின் செவிக் கினிய ஈரச்சொல் நடையாடாமல், முரட்டு சம்ஸ்கிருதம் நடையாடுகின்ற திசையாதலின், அதனை உய்யக் கொள்ளுவதன் பொருட்டு வடதிசை பின்பு காட்டினார். உண்மை அடிய வனான விபீடணாழ்வான், நீடுவாழ்பவன் (சிரஞ்சிவி) ஆக என்றும் இருந்து வருதலின்: தென்திசை இலங்கை நோக்கினார். இங்ஙனம் நாற்றிசையினரையும் உய்விக்கப்பள்ளி கொண்டருளிய பெருமாளின் கருணைச் செயல், தமக்குப் பெருநலன் விளைவித்ததனை, ஆழ்வார் இப்பாசுரத்திற் குறிப்பிட்டு மகிழ்கின்றார்.

(19)

பாயும்நீர் அரங்கம் தன்னுள்
பாம்பணைப் பள்ளி கொண்ட
மாயனார் திருநன் மார்பும்,
மரகத உருவும் தோளும்,
தூய தாமரைக் கண்களும்
துவரிதழ்ப் பவள வாயும்
ஆயசீர் முடியும் தேசும்
அடியரோர்க்கு அகல லாமே?

பொழிப்புரை :

வெள்ளம் பெருகுகின்ற காவிரியாறு சூழ்ந்த, திருவரங்கம் பெரிய கோயிலின்; ஆதிசேடனாகிய படுக்கையில் கண்வளர்ந் தருளிய, வியத்தகு பண்பும் செயலும் வாய்ந்த எம்பெருமானின், பிராட்டி வாழ்கின்ற அழகிய திருமார்பும், மரகதமணி போன்ற பசுமை நிறமுடைய திருமேனியும், திருத்தோள்களும், தாமரைமலர் போன்ற அழகிய கண்களும், சிவந்த உதடுகளும், பவளம்போன்ற வாயும், வேலைப் பாடுள்ள அழகிய திருமுடியும், இவற்றின் ஒளியும் அடியவர்களுக்கு ஒருசிறி தேனும் இழக்கத்தக்கன வாகுமோ?

குறிப்புரை :

பெருமாளின் அழகைக் கண்டு, அனுபவித் தலைத் தாம் இனி ஒருபோதும் அகன்று இழத் தல் இயலாது என்று, தமது ஆற்றாமையையும் ஆராமையையும் ஆழ்வார் இப்பாடலில் அருளிச் செய்கின்றார். மாயனார்-வியக்கத்தக்க பண்பும் செயலும் உடையவர். *(20)*

—தொடரும்

விநாயக வணக்கம்

"தமிழ்க்கடல்" சிவத்திரு. ராய. சொ. அவர்கள்

தொகுத்துதவியது

(தமிழ்நாடு தெய்விகப் பேரவை வெளியீடு)

வேழ முகத்து விநாயக போற்றி!
பேழை வயிற்றுப் பிள்ளாய் போற்றி!
ஏழைக்கு அருள்செய் எம்மான் போற்றி!
வாழ வகுக்கும் வள்ளால் போற்றி!
சிவனார் பெறும்முதற் செல்வா போற்றி!
சேயிழை உமைதரு சிறுவா போற்றி!
திருமால் தனக்கு மருகா போற்றி!
திருமகள் மகிழுமாப் பிள்ளாய் போற்றி!
யானை உரித்தவன் மகனே போற்றி!
யானையைக் காத்தவன் மருமான் போற்றி!
யானையின் கைபெறு கோனே போற்றி!
யானையால் வள்ளியை வென்றாய் போற்றி!
யானை மணாளனின் அண்ணா போற்றி!
யானை முகத்தனை அழித்தாய் போற்றி!
பெருச்சாளி ஏறும் பெரியோய் போற்றி!
பேணுவார் பிழைகள் பொறுப்பாய்போற்றி!
வள்ளிதெய் வானை மைத்துன போற்றி!
வல்லபை மங்கை மணாள போற்றி!
கடிமணம் விரும்பாக் கணேச போற்றி!
மடியினில் மாதினை வைத்தாய் போற்றி!
சித்தி புத்தியின் தெய்வமே போற்றி!
முத்தி கொடுக்கும் முதல்வ போற்றி!
மூலை முடுக்கெல்லாம் முளைத்தாய் போற்றி!
மூவிரு முகத்தோன் முன்னவ போற்றி!
சிதறுகாய் சிறுவருக்கு ஈவாய் போற்றி!
சிவன்தேர் அச்சினைச் சிதைத்தாய் போற்றி!
கொம்புஎழுத்தாணியாக்கொண்டாய்போற்றி!
எம்பிரான்பிறையதில்இணைத்தாய்போற்றி!
மலையினில் பாரதம் வரைந்தாய் போற்றி!
மலைமகள் மகிழுமா மணியே போற்றி!
முன் வணக்கங்கொள் முனைவ போற்றி!
பன்னிரு தம்பிகண் எண்ணினை போற்றி!
பின்னவன் முழமிடப் பிணங்கினை போற்றி!
அன்னையின் அணைப்பால் ஆறினை போற்றி!
எண்ணுவார் இடரைக் களைவாய் போற்றி!
எண்ணார் இடர்உற இழைப்பாய் போற்றி!
பரமன் மடியுறை பண்ணவ போற்றி!
பார்வதி ஈன்ற பாலா போற்றி;
அப்பம் அவல்பொறி கப்புவாய் போற்றி!
இப்புவி எல்லாம் இருப்பாய் போற்றி!
ஓங்கா ரப்பொருள் உணர்த்துவாய் போற்றி!
தீங்கெலாம் அகற்றும் செம்மல் போற்றி!
குட்டிக் குனிப்புறக் கொள்வாய் போற்றி!
பட்டி தொட்டிஎலாம் படர்வாய் போற்றி!

குளக்கரை தொறும்குடி கொண்டாய் போற்றி!
அளப்பரும் ஆற்றல்கொள் அம்மான் போற்றி!
அரசின் நிழல்அமர் அரசே போற்றி!
பரசுவார் பவப்பிணி அறுப்பாய் போற்றி!
அறுகினை ஆசையோடு அணிவாய் போற்றி!
உறுபெரு மோதகம் உவப்பாய் போற்றி'
உலகீன்ற கன்னியின் குலமுதல் போற்றி!
நலனெலாம் நம்பர்க்கு அருள்வாய் போற்றி!
மலைபோல் வருதுயர் மாய்ப்பாய் போற்றி!
கலையெலாம் கருத்துள் வளர்ப்பாய் போற்றி!
அலகிலா விளையாட்டு அயர்வாய் போற்றி
உலகெலாம் அடக்கிய உந்தியாய் போற்றி!
மலைமகள் மடிதவழ் மைந்தா போற்றி!
நலம்நுகர் அவர்திறம் நகைப்பாய் போற்றி
புலவர்க்கு விருந்தாய்ப் பொலிவாய் போற்றி!
கலக லெனச்சிறார்க் கவர்வாய் போற்றி!
பேரொளி பரப்பும் பெருமுடி போற்றி!
பாரதம் எழுதிய ஓர்பிறை போற்றி!
கூருறும் மற்றைக் கொம்பும் போற்றி!
கார்என அருள்பொழி கண்இணை போற்றி
நான்மறை பகர்ந்தருள் நால்வாய் போற்றி!
வான்குறை கேட்டருள் மாச்செவி போற்றி!
மோதக மணநுகர் மூக்குப் போற்றி!
போதகப் புண்ணியப் பொலிமுகம் போற்றி!
மண்முழுது அடக்கிய வயிறு போற்றி!
கண்அகல் உந்திக் கமலம் போற்றி!
வாரி வழங்கு, கை ஐந்தும் போற்றி!
சிரியோர் முடிபடி திருவடி போற்றி;
சிவனார் கோயிலில் திகழ்வாய் போற்றி!
தவமாச் செல்வர்சொல் தவமே போற்றி!

அம்பிகை கோயிலும் அமர்வாய் போற்றி!
நம்பினார் துன்பெலாம் நலிவாய் போற்றி!
தம்பி கோயிலிலும் தங்குவாய் போற்றி!
உம்பரும் போற்றும் ஒருவ போற்றி!
காளி கோயிலும் காப்பாய் போற்றி!
ஊழி தோறும் உலவாய் போற்றி!
பெருமாள் கோயிலும் பிறங்குவாய் போற்றி!
திருமால் தங்கைநற் செல்வா போற்றி!
அடியார் கோயிலும் அமர்வாய் போற்றி!
கடிசேர் அறுகணி கணபதி போற்றி!
தனிப்பெருங் கோயிலும் சார்வாய் போற்றி!
மனித்தரைக் கவர்தரு வள்ளால் போற்றி!
எங்கும் இருக்கும் இறைவ போற்றி!
மங்கலம் தொடங்கமுன் வருவாய் போற்றி!
கங்கை அணிந்தவன் கனியே போற்றி!
நங்கை உமைதரு புங்கவ போற்றி!
எளிமையில் அருள்புரி இறைவ போற்றி
ஏழைகள் பங்கில் இருப்பவ போற்றி!
தும்பிக் கை, பெறு தோன்றால் போற்றி!
தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி!
அறிவு மதம்பொழி ஆனையே போற்றி!
குறைவிலாப் பெருங்குணக் குன்றே போற்றி!
கூத்துடை யான்தரு குமரா போற்றி!
கூத்துகந்து ஆடும் குரிசில் போற்றி!
சந்திதோறு இருக்கும் தத்துவ போற்றி!
சிந்தையுட் புகுந்த தேவா போற்றி!
கணநாத போற்றி! கயமுக போற்றி!
விநாயக போற்றி! விக்கின போற்றி!
எண்ணிய ஈவாய் போற்றி! போற்றி!
புண்ணியப் பிள்ளையார் போற்றி! போற்றி!

முருக வணக்கம்

''தமிழ்க்கடல்'' சிவத்திரு. ராய. சொ. அவர்கள்
தொகுத்துதவியது.

தமிழ்நாடு தெய்விகப் பேரவை வெளியீடு

திருத்தாண்டகம் (11) போற்றி 108

திருப்பரங்குன்று இனிதுறையும் செல்வா போற்றி!
திருச்செந்தூர்ச் சீரலைவாய்த் தேவா போற்றி!
திருப்பழநி மலையிருக்கும் தேவே போற்றி!
திருவேர கச்சாமி நாதா போற்றி!
திருத்தணிகை முதல்மலைகள் திகழ்வாய் போற்றி!
தீம்பழங்கள் உதிர்சோலை சேர்வாய் போற்றி!
திருப்பொலிய உலகாளும் செம்மால் போற்றி!
செந்தமிழர் தெய்வமே போற்றி! போற்றி!
(1)

சொக்கேசர் பெற்றஉயர் தோன்றல் போற்றி!
தொல்உமையாள் ஈன்றெடுத்த சோதி போற்றி!
சக்கரம்கொள் மால்தங்கை தனையா போற்றி!
தத்துவங்கள் கடந்ததனிப் பொருளே போற்றி!
நக்கீரர், பழம்பாட்டை நயப்பாய் போற்றி!
நாவலர்கள் கவிக்கினிய நம்பா போற்றி!
விக்கின விநாயகனுக்கு இளையாய் போற்றி!
வேடர்குல மாப்பிள்ளாய் போற்றி! போற்றி!
(2)

அருணகிரி நாவில்நடம் புரிவாய் போற்றி!
அனுபூதி அலங்காரப் புகழாய் போற்றி!
கருணைபொழி பன்னிரண்டு கண்ணா போற்றி!
கார் அனைய கைஈராறு உடையாய் போற்றி!
அருள்சுரக்கும் ஆறுமுகத்து அண்ணல் போற்றி!
ஆலாலம் உண்டகண்டன் பாலா போற்றி!
வெருவுறச்சூர் தடிந்தவடி வேலா போற்றி!
மெய்ஞ்ஞானப்பிள்ளையே போற்றி! போற்றி!
(3)

வள்ளியெனும் குறக்கொடியை மணந்தாய் போற்றி!
மணப்பதற்கு மரம்போல நின்றாய் போற்றி!
கொள்ளைகொளும் எழில் அமைந்த குமரா போற்றி!
கும்பிடுவோர் இடர்களையும் குகனே போற்றி!
தெள்ளுதமிழ்ப் பெருங்கடலுள் திளைப்பாய் போற்றி!
தீந்தமிழால் வைதார்க்கும் அருள்வாய் போற்றி!
புள்ளிமயில் ஏறிவரும் புனிதா போற்றி!
புண்ணியம்செய் புண்ணியமே போற்றி! போற்றி! (4)

தேவயானையை மணஞ்செய் சிங்கம்போற்றி!
தேவசேனாபதியாத் திகழ்ந்தாய் போற்றி!
தேவயானைக்கிளைய சிறுவா போற்றி!
தேவேந்திரன் மருமகனும் செம்மல் போற்றி!
தேவர்சிறை மீட்டருள்செய் தீரா போற்றி!
தேவரெலாம் தொழச்சிறந்த தேவே போற்றி!
தேவாரம் பெறுசிவனார் மைந்தா போற்றி!
தேவாதி தேவனே போற்றி! போற்றி! (5)

கந்தா! குகா! கடப்பந்தாராய் போற்றி!
காதலியர் இருவரையும் பிரியாய் போற்றி!
கொந்தாரும் குறிஞ்சிப்பூந் தொடையாய் போற்றி!
கோழிஎனும் கொடிகொண்ட குரிசில் போற்றி!
செந்தேறல் தினைமாவோடு உண்டாய் போற்றி!
தினைகாத்த சிறுமிமயல் சேர்ந்தாய் போற்றி!
எந்தாயே! எம் எப்பா! இறைவா போற்றி!
எழுத்தழிக்கும் இணையடிகள் போற்றி போற்றி! (6)

சரவணத்தில் வந்துதித்த தவமே போற்றி!
சரவணபவா; கார்த்திகேயா போற்றி!
முருகனெனும் அழகுஇளமை முதலே போற்றி!
முனிவர்களும் வணங்குகின்ற மூர்த்திபோற்றி!
திருகுகுணத்து அசுரர்விழச் செற்றாய் போற்றி!
தேவர்மறைத் தீவளர்த்த சீரோய் போற்றி!
உருகுமனத்து அடியர் உளத்து உறைவாய் போற்றி!
உறுகிரிகள் உறைபவனே போற்றி போற்றி (7)

மாம்பழத்துக்கு உலகைவலம்வந்தாய்போற்றி!
மயில்ஏறிக் கணப்பொழுதில் அடைந்தாய் போற்றி,
தீம்பழத்தை அண்ணன்உணக் கண்டாய் போற்றி!
தே, முதல்வன் [illegible]ச்சூழ்ச்சி அறிந்தாய் போற்றி!
தேம்பதுமப் பிரமன் அஞ்சச்செய்தாய்போற்றி!
சிறையிட்டுப் பொருள்கூறும் செவ்வாய் போற்றி!
காம்பறிதோட் கயற்கண்ணி கண்ணேபோற்றி!
கட்டழகுக் கடவுளே! போற்றி! போற்றி (8)

உலகின்ற ஒருகன்னி மகனே போற்றி!
ஊழிமுதல் சிவன்தந்த ஒருவ போற்றி!
பலகலையும் உணர் அறிவுப் பழமே போற்றி!
பன்னிரண்டுகண்,கைகள் படைத்தாய்போற்றி!
மலர்ஆறு முகம்கொண்ட வள்ளால் போற்றி!
வள்ளி மலர் அடி வணங்கும் மணாளா போற்றி!
மலைபிளக்க வேல் எறிந்த மன்னா போற்றி!
மயில்ஏறும் பெருமானே போற்றி! போற்றி! (9)

கடல்வற்ற வேல்விட்ட கடம்பா போற்றி!
கார் அவுணக் கடல்குடித்த காளாய் போற்றி!
குடல்சரியச் சூரன்உரம் குடைந்தாய் போற்றி!
குன்றமெல்லாம் குடிகொண்டகுழவி, போற்றி!
மடவர்மார் வயிற்றில் தீ வைத்தாய் போற்றி!
மறைவகுத்த மகத்தீயை வளர்த்தாய் போற்றி!
படஅரவில் துயில்மாயோன் மருகா போற்றி!
பாம்பணிந்த பரன்மகனே போற்றி! போற்றி! (10)

மருவினிய மலர்ப்பாதம் போற்றி! போற்றி!
மாவீரச் சிலம்புக்கால் போற்றி! போற்றி!
பொருவரிய பொன்னின்இடை போற்றி! போற்றி!
போர்வல்ல, வரைமார்பம் போற்றி! போற்றி!
தருகொடைக்கை பன்னிரண்டும் போற்றி! போற்றி!
தாயெனும்சீர் முகம் போற்றி! போற்றி!
அரன்மகிழ மறைபுகல்வாய் போற்றி! போற்றி!
அருட்கண்கள் போற்றியோ! போற்றி! போற்றி! (11)

148692
-600 008.



குடந்தை திரு. ஆதிகும்பேசுவர சுவாமி கோயிலுக்குத் தமிழக ஆளுநர் மேதகு திரு. கே. கே. ஷா அவர்கள் வருகை தந்த பொழுது, "நிறை குடச் சிறப்பு" (பூர்ண கும்ப மரியாதை) அளித்து வரவேற்கப் பெறுதலும்; துணையாணையர் திரு. வி. எஸ். கோதண்டபாணி, B.Sc., B.L. அவர்களும், உதவி ஆணையர் திரு. ஆர். அர்ச்சுனன், B.A அவர்களும் பிரசாதப் பை வழங்குதலும். (18—8—71)



லால்குடி திரு. சப்தரிஷீசுவரர் கோயிலில் நடராசர் சபையின் விமானக் குடமுழுக்கு விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்த அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு மு கண்ணப்பன் அவர்களுக்கும், வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களுக்கும், கோயிலில் மரியாதை செய்யப்பெறுதல். (26—8 - 71)

எழும்பூர்ச் செல்வவிநாயகர் கோயிலில், சென்னை உதவியாணையர் திரு. சுவாமிநாதன் அவர்கள், தமிழருச்சனை தொடங்கி வைத்தல்

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept,: Madras-34. Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras-3. Editor : N. R. Murugavell, M.A., M.O.L;